திருமூலரின்
முப்பது உபதேசம்

திரு. அடிகளாசிரியன்

திருமூலரின்
மும்மதி உபதேசம்

உரையாசிரியர்

தீரு. அடிகளாசிரியர்

ஓய்வுபெற்ற தமிழ்ப் பேராசிரியர்

சித்தநாதேச்சுராதீனம்

குகையூர் அஞ்சல் – 606 306

விழுப்புரம் மாவட்டம்

பதிப்பாசிரியர்

சோதிட ரத்னா

முனைவர் அ. சிவபெருமான்

4–சி, வெள்ளி விழாச்சாலை

செயங்கொண்ட சோழபுரம் – 621 802

பெரம்பலூர் மாவட்டம்.

குகையூர் சித்தநாதேச்சுராதீனத் திருவருள் நிலையத்தின்
ஆன்ம நலப்பணி வெளியீடு - 14

நூல் குறிப்பு

பெயர்	:	திருமூலரின் முப்பது உபதேசம்
ஆசிரியர்	:	திரு. அடிகளாசிரியர்
பதிப்பு	:	முதற்பதிப்பு - டிசம்பர் 2002.
அளவு	:	டிம்மி 1/8
பக்கங்கள்	:	8 + 88 = 96
விலை	:	ரூ. 20-00
படிகள்	:	500
வெளியீட்டாளர்	:	திருவருள் நிலைய வெளியீட்டகம் குகையூர் - அஞ்சல் கல்லக்குறிச்சி - வட்டம் விழுப்புரம் மாவட்டம் - 606 306.
அச்சகம்	:	சுபம் பிரிண்டர்ஸ், சுப்பிரமணியம் தெரு, சிதம்பரம். போன்: 232544

தாரமங்கலத்தில் வாழ்ந்துவரும் திரு. பெருமாள் முதலியார் முதலான முதியோரால் புதியதாக நிறுவப்பெற்ற முதியோர் இல்லக் கட்டடத் திறப்பு விழாவில் முதியோராகிய திரு. அடிகளாசிரியரால் எழுதப்பெற்ற இந்நூல் வெளியிடப் பெற்றது.

பொருளடக்கம்

பதிப்புரை

நூலாசிரியர் முன்னுரை

1.	திருமந்திரம் – சில சிந்தனைகள்	—	1 – 8
2.	திருமூலரின் முப்பது உபதேசம்	—	9 – 80
3.	நூலாசிரியர் வாழ்வும் பணியும்	—	81 – 88

பதிப்புரை

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே - திருமூலர்

திருமூலர் அருளிய திருமந்திரம் சைவத்திருமுறைகள் பன்னிரண்டில் பத்தாவதாக வைக்கப்பட்ட நூலாகும். இந்நூல் இலக்கிய இன்பத்திற்காக இயற்றப்பட்ட நூலன்று. ஆன்மீகப் பயிற்சிக்காக இயற்றப்பட்ட நூலாகும். மேலும், நம்நாட்டில் பல ஆண்டுகளாக நிலவி வந்த தத்துவங்களை உபதேசிப்பதற்காக எழுந்த ஞான நூலாகவும் இதைக் கொள்ளலாம்.

எனது தந்தையார் பேராசிரியர் **திரு. அடிகளாசிரியர்** அவர்கள் பல ஆண்டுகளாகத் திருமந்திர நூலுள் மூழ்கி முத்தெடுத்து நமக்கு வழங்கி வருகின்றார். இதுகாறும் இவர், திருமூலரும் பேருரையும், காயத்துள் நின்ற கடவுள், திருவாசக அநுபூதி, கீதையின் அறிவுப் பொருள், திருமந்திர உணர்வு ஆகிய நூல்களை எழுதியுள்ளார். அவ்வகையில் தற்போது, **"திருமூலரின் முப்பது உபதேசம்"** என்ற பெயரில் இந்நூலை எழுதியுள்ளார்.

திருமந்திரம் ஒன்பது தந்திரங்களை உடையது. அவற்றுள் முதலாவது தந்திரத்தின் முதற் பகுதி **'உபதேசம்'** என்பதாகும். இப்பகுதியுள் முப்பது பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அம்முப்பது பாடல்களுக்கு அரிய, நுட்பமான, சிறந்த விளக்கங்களை இந்நூலுள் கண்டு தெளியலாம்.

உயிரானது இறைவனை அணுக முடியாமல் பிறப்பு இறப்புக்களில் அகப்பட்டு பாசத்தில் சுழன்று அழுந்திக் கிடக்கின்றது. இந்நிலை மாறி உயிரானது இறைவனை அணுகி ஒன்றாக வேண்டுமானால் திருமூலர் அருளிய இவ்உபதேசங் களை மேற்கொள்ளவேண்டும். அதற்காகவே இந்நூல் எழுதப் பட்டுள்ளது, மேலும், **சிறப்பாகச் சொல்லப் போனால் குகையூர் சித்த நாதேச்சுராதீனத்தின் குருவாகிய திரு. அடிகளாசிரியர் அவர்கள் அவ்வாதீனத்தின் சீடர்களுக்கு கூறிய குருஉபதேசமே இந்நூல்தான். ஆதலால் ஆதீன சீடர்கள் இவ்உபதேசத்தை மேற்கொண்டு உய்வார்களாகுக.**

இந்நூல் வெளிவர உதவிய அனைத்து நெஞ்சங்களையும் வணங்கி மகிழ்கின்றேன்.

இங்ஙன்

31—12—2002 **அ. சிவபெருமான்**

நூலாசிரியர் உரை

(திரு. அடிகளாசிரியர்)

தவத்திரு தத்துவராய அடிகளார் இயற்றியது "சசிவன்ன போதம்" எனும் பெயருடைய ஒரு வேதாதந்த நூல் இந்நூல் திருமூலரின் முத்தமிழ் வேத சதாசிவ தத்துவத்தின் கொள்கை களை உடையது. மேற்கண்ட நூலுக்கு திருமூலரின் கொள்கைகள் விளங்குமாறு சென்றயாண்டில் உரை ஒன்றை எழுதி வெளி யிட்டேன்.

வயது முதிர்ச்சியின் காரணமாக இனி ஒன்றும் எழுதுவ தில்லை எனக் கருதிக் கொண்டு அமைதியாக இருந்து வந்தேன். அந்நிலையில் சின்னசேலத்தில் இருந்து, இப்பொழுது ஆத்தூரில் வாழ்ந்து வரும் மருத்துவர் உயர்திரு. அ. **விசுவநாதன்** M B.B.S., M.D அவர்கள் என்னைக் காண வந்தார்கள். இவர் ஆங்கிலமும் தமிழும் நல்கு படித்தவர். ஆன்மீகப் பயிற்சி உடையவர். அவர் என்னைப் பார்த்து நீங்கள் எழுதிய "திருமூலரும் பேருரையும் என்ற நூல் திருமந்திரத்தில் பொருள் விளங்காத பாடல்களுக்கெல்லாம் பொருளை விளக்குவதாக அமைந் துள்ளது. இதனைப் போல திருமந்திரத்தில் விளங்காத பாடல் களுக்கு விளக்கம் எழுதினால் நன்றாக இருக்கும் என்று தெரிவித் தார்கள். அவர்கள் கூறிய மொழி என்னைத் தூண்டிவிட்டது. அத் தூண்டுதலால் திருமந்திரத்தில் உள்ள உபதேசம் முப்பது என்ற பகுதிக்கு உரையினை எழுதி முடித்தேன்.

நூல் உருவாக்கம்:

நான் மிகவும் முதுமையடைந்துள்ளேன் (93). அதனுடன் நரம்பு வலுவிழந்த நோயும் ஏற்பட்டுள்ளது. அதனால் பிறரைக் கொண்டு இந்நூலை எழுத வேண்டிய நிலை ஏற்பட்டது. சின்னசேலத்தில் சிவநேசர்மடம் என்னும் மேலமடத்தில் வாழ்ந்துவரும் உயர்திரு. குகநேசன் என்பவரின் புதல்வன்

கு. மோகனசுந்தரம் அடிக்கடி வந்து எழுத்துப் பணியை மேற் கொண்டு முடித்துக் கொடுத்தார். இவ்வெழுத்துப் பணிக்கு எனது புதல்வன் **திரு. அ. சிவபெருமானும்**, எங்கள் ஊரைச் சேர்ந்த **சி. முருகனும்**, உதவினர்.

நூல் வெளியிட நிதி உதவிய சீடர்கள்:

இவ்வுரைநூலை எழுதிக் கொண்டிருக்கும் பொழுது தாரமங்கலத்தில் வாழ்ந்து வரும் கயிலைமணி **உயர்திரு. பெருமாள் முதலியார்** அவர்கள்தம் அறுபதாம் ஆண்டு நிறைவில் என்னைக்கண்டு ஆசி பெற வந்தார்கள். அப்போது இவ்உபதேச உரைநூல் உருவாவதை அறிந்து இதன் வெளியீட்டிற்காக ரூபாய் ஆயிரம் கொடுத்தார்கள். அதன்பின்னர் என்னைக்கண்டு ஆசி பெற வந்த எங்கள் ஆதீன சீடரான **உயர்திரு. பூபதி ராஜன்** குருகாணிக்கையாக ரூபாய் இரண்டாயிரம் கொடுத் தார்கள். இத்தொகையை அடியாக வைத்துக் கொண்டு மேலும் செலவாகிய சில ஆயிரங்களை நான் செலவிட்டு அச்சிட்டு முடித்தேன்.

அச்சகப் பணி:

வழக்கம்போல் என்னுடைய நூல்களைப் பதிப்பாசிரியராக அமர்ந்து பதிப்பித்துவரும் எனது இளையமகன் **அ. சிவபெருமான்** அச்சகம் சென்று, மெய்ப்பு, அட்டை முதலானவற்றை ஒழுங்கு செய்து தம் கடின உழைப்பால் இந்நூலைப் பதிப்பித்து வழங்கி யுள்ளார்.

கடலூரில் தமிழாசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் புலவர் **திரு. ஞானப்பிரகாசம்** அவர்கள் மெய்ப்புக்களை மிக்க அன்புடன் திருத்தி உதவினார். நூலின் மேலட்டை உருவாக ஆலோசனை நல்கியவர் சிதம்பரம் பேராசிரியர் **திரு. சுவாமி நாதன்** ஆவார். சிதம்பரம் சுபம் அச்சக உரிமையாளர்களாகிய **திரு. தட்சிணாமூர்த்தி**யும், **திரு. குருசாமி**யும் நல்ல முறையில் அச்சிட்டு வழங்கினர். இவர்களேயன்றி எனது குடும்பத்தினர் களும் இப்பணிக்கு உதவினர். இவ்வாறு நூல் உருவாக்கத்திற்கு உதவிய மேற்கூறிய அனைவரையும் நன்றாக வாழ்த்தி எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதுமையான வயதில் நரம்பு நோயால் பாதிக்கப் பெற்றுப் பல ஆண்டுகளாக வீட்டிலேயே தங்கியுள்ள என்னை எங்கள் ஆதீனச் சீடர்கள் புரவலர்களாக இருந்து புரந்து வருகின்றனர். அவர்கள் என்னைப் புரப்பதாலும் என் குடும்பத்தினர் என்னைக் காப்பதாலும் நான் தமிழையும் ஆன்மீகத்தையும் புரந்து வருகின்றேன், இது இறைவன் திருவருளே.

என்னோடு இருக்கும் இறையவனே
என்றன் நினைவை அறிவாயே
பொன்னோ பொருளோ விரும்புகிலேன்
போதும் போதும் இனிப்பிறப்பு
நின்னோடு ஒன்றிச் சிவமாகும்
நேய நிலைமை கிடைத்துவிட்டால்
என்னோ இனியான் வேண்டுவது
இதன்மேல் ஒன்றும் வேண்டேனே.

இங்ஙன்

30-12-02 திரு. அடிகளாசிரியன்

உ

திருமூலர் திருவடி வாழ்க

1. திருமந்திரம் - சில சிந்தனைகள்

முன்னுரை:

திருமந்திரம் என்ற சொல்லை "திரு" ஆகிய மந்திரம் என்று அல்வழியில் பண்புத் தொகையாகவும், "**திருவைத் தரும் மந்திரம்**" என்று பொருள் கொண்டு வேற்றுமைத் தொகையுள் இரண்டாம் வேற்றுமைத் தொகையாகவும் கொள்ளலாம். இவற்றுள் 'திரு' என்பது என்ன? என்று ஆராயில், திருவாசகத்துள்

"**அன்பருள்ளாம் சிவமே பெறுந்திரு எய்திற்றிலேன்**"
(திருச்சதகம் – மெய்யுணர்தல் 5)

என்னும் பகுதியைக் கருதினால், "**சிவத்தைப் பெறுதற்குக் கருவியான சிவஞானம் என்னும் அறிவுச் செல்வமே**" **'திரு' என்னும் சொல்லுக்குப் பொருளாகின்றது.**

"மந்திரம்" என்ற சொல்லின் பொருள் என்ன என்றால், மந் + திரம் என்று பிரிக்கப்பட்டு மனத்தினுள் நிலையாக நிற்பது அல்லது நிலையாக வைத்து காப்பாற்றப்படுவது என்று பொருள் கொள்ளவேண்டும். எனவே, "அன்பு வடிவாகிய சிவத்தை அறிதற்குக் கருவியான திரு என்னும் அறிவு செல்வத்தை உணர்த்தி அத்திருவை மனத்தில் நிலையாக வைத்து காத்தலுக்கு உரியதாகிய நூல்" என்ற பொருளை திருமந்திரம் என்ற சொல் நமக்குத் தருகின்றது.

திருமூலர் திருமந்திர நூலுள் சிவத்தைப் பற்றிப் பல செய்தி களைக் கூறுகின்றார். அவற்றுள் தலைமையான செய்தி ஒன்றை நான் இங்கே தெரிவிக்கின்றேன்.

தலைமையான செய்தி:

திருமந்திரம் ஒன்பதாம் தந்திரத்துள் ''தோத்திரம்'' என்ற பகுதியில், முதல்பாட்டாய் இருப்பது கீழ்வரும் பாட்டாகும்.

''மாயனை நாடி மனநெடுந் தேரேறிப்
போயின நாடறி யாதே புலம்புவர்
தேயமும் நாடும் திரிந்தெங்கள் செல்வனைக்
காயம்இந் நாட்டிடைக் கண்டுகொண் டேனே''
(2982)

இப்பாட்டு திருமூலரின் தலைமைக் கருத்தைத் தெளிவாகத் தருகின்றது.

மாயன் என்னும் சொல் மறைந்திருக்கும் கடவுளை உணர்த்தும். பலர் அந்த மாயனைக் காண்பதற்கு நாட்டம் கொண்டு மனமாகிய நீண்ட தேரில் ஏறி, அம்மாயன் எப்படி? எங்கே? இருப்பான் என்று ஆராயத் தொடங்கி, அந்த மறைய வனாகிய மாயன் சென்று வாழும் நாட்டை அறிந்து கொள்ள முடியாமல், புலம்புகின்றவர்களாய், உள்ளனர். நானும் தொடக்கத்தில் அந்த மாயனாகிய நந்தியைத் தன் தேயத்திலும், பிற தேயத்திலும்; தன் நாட்டிலும் பிற நாட்டிலும்; கைலாயம், காசி, சிதம்பரம் முதலிய திருப்பதிகள் எல்லாவற்றிலும் தேடி, முடிவில் என் உடம்பாகிய இந்த நாட்டிலேயே என் உயிருக்குள் இருந்து என்னை அவன் இயக்கி வருகின்றான் என்ற செய்தியை உணர்ந்து கொண்டேன் என்று கூறுகின்றார்.

ஆகவே திருமூலர் கடவுளைப் புறத்தே காணாமல் அகத்தே அன்புருவமாகக் காண்பவர் என்பதுதான் இவரிடம் காணப்படும் தலைமையான செய்தியாகும்.

மேற்கூறிய கருத்தினை வலியுறுத்தும் சில செய்திகள்:

தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகளும்,

''புறம்பு காண்குவன் புல்லியன் ஈசனை
அறிந்த ஞானி அகமுறக் காண்பனால்
எறும்பி காணுறில் இன்கரும் பேகொளும்
செறிந்த ஆடுஇலை தின்பன என்பவே''

(சாதகாங்கதி–7)

என்று கூறுவர்.

இதன் பொருள்:

அறிவில்லாத புல்லியன் ஈசனைப் புறத்தே காண்கின்றான். ஆனால் அறிந்த ஞானியோ தனக்குள்ளேயே ஈசனைக் காண்கின்றான். ஆகவே அகவழிபாடு செய்வது எத்தகையது? எனில் யானை கரும்பைக் காணின் மேல் சோகையாகிய இலையைத் தின்னாமல் உள்ளே உள்ள இனிய கரும்பினைத் தின்பது போன்றது.

புறவழிபாடு செய்வது எத்தகையது? எனில் ஆடு கரும்பைக் காணில் கரும்பின் மேல் சோகையாகிய இலையைத் தின்பது போன்றது என்பதாம்.

திருவாசகமும் கடவுளைக் கருதி புறவழிபாடு செய்பவர் களுக்கு அவன் அண்மையில் இல்லாமல் சேய்மையில் உள்ளான் என்ற கருத்தால்

''புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க''
(சிவபுராணம்)

என்று கூறும்.

மேற்கண்டவற்றால் திருமூலரின் தலைமையான கொள்கை, இறைவனை அகத்தே வழிபடுதல் என்பதாகும் என்பதை நாம் தெளிவாக உணர்ந்து கொண்டோம்.

அன்பு வடிவான சிவனை அன்புடைய உள்ளத்தில் வைத்து அன்பாலே வழிபடுதலே திருமூலரின் முதல் கொள்கையாகும்.

திருமூலருடைய தத்துவம்:

திருமூலருடைய தத்துவ கொள்கைக்கு, **''சதாசிவ தத்துவம் முத்தமிழ் வேதம்''** என்று பெயர் கூறப்படுகின்றது. எப்பொழுதும் சிவத்தையே கருதியிருக்கின்ற மூன்று இனிய தமிழ் போன்ற சீவதுரியம் முதலான மூன்று பொருள்களை ஆராய்ந்து அறியும் அறிவு என்பது இதன் பொருளாகும்.

திருமூலரது பாடல்:

திருமூலர் திருமந்திரத்தை ஒரே வகையான பாடல் களாலேயே இயற்றியுள்ளார். இப்பாடல்

''அளவடி நான்கின கலி விருத்தம்மே''
[யாப்பருங்கல விருத்தி – 86]

என்னும் விதியின்படி, அளவடி நான்கினைக் கொண்ட பதினாறு சீரால் அமைந்ததாகும்.

தமிழின் யாப்பிலக்கணம், பாடலில் வருகின்ற அடிகளை இருசீர் கொண்ட குறளடி என்றும், முச்சீர் கொண்ட சிந்தடி என்றும் நான்கு சீரைக்கொண்ட அளவடி என்றும், ஐந்து சீர் கொண்ட நெடிலடி என்றும், ஆறு முதலான சீர் கொண்ட

கழி நெடிலடி என்றும் ஐந்து விதமாகக் கூறும். இந்த ஐவகை அடியில் திருமூலருடைய பாட்டு நாற்சீர் கொண்ட அளவடி யாகவே வந்துள்ளது. இந்த நாற்சீரடிக்கு அளவடி, நேரடி, முற்றடி, முழு அடி என்று பல பெயர் உள்ளன. திருமூலர் எடுத்தாண்ட இந்த நாலடியை நம்பியாண்டார் நம்பிகள் முழுத் தமிழ்அடி என்று கூறுகின்றார்.

தொல்காப்பியர் நாற்சீர் கொண்ட இந்த அளவடி எல்லா அடிகளிலும் மிகச் சிறந்தது என்னும் கருத்தால்,

''நாற்சீர் கொண்டது அடியெனப் படுமே''

(*தொல்கா - செய்யுளியல் – 31*)

என்று சிறப்பித்து ஓதுவாரானார். இந்நூற்பா உரையில் **பேராசிரியர்** இருசீரானும், முச்சீரானும், ஐஞ்சீரானும், அறுசீர் முதலியவற்றானும் அடி வருமாயினும் அவை சிறப்பில என்றவாறாம், என்று கூறுவதனால் இந்த நாற்சீர் கொண்ட அடியே மிகச்சிறந்த அடியாகும் என்பது பெறப்படும்.

திருமுறைகளில் அப்பர் பெருமான் அருளிய ஐந்தாம் திருமுறை முற்றிலும் நாற்சீர் கொண்ட கலி விருத்தம் என்பதை அறிஞர் கருதுக. சேக்கிழாரும் பெரியபுராணத்தை

''உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்''

என்ற நாற்சீரடி பாட்டாலேயே தொடங்கி

''நின்றது எங்கும் நிலவி உலகெலாம்''

என்ற நாற்சீரடிப் பாட்டாலேயே தம் புராணத்தை முடிப்பார்.

''அளவடி நான்கின் கலிவிருத் தம்மே,' (81)

என்ற யாப்பருங்கல நூற்பா உரையில் ஏகார விதப்பினால் அடிமறியாய் நாற்சீர் நாலடியாய் வருவன கலிமண்டில

விருத்தம் என்றும், அடிமறி ஆகாதே நாற்சீர் நாலடியாய் வருவன கலிநிலை விருத்தம் என்றும் வழங்கப்படும் எனக் கொள்க. ‘‘அளவடி நான்கின’’ என பன்மை சொல்லியதனால் கலிஒலி வழுவாது நாற்சீர் நாலடியாய் வருவன எல்லாம் தரவு கொச்சக கலிப்பா ஆகும் என்றும், கலி ஓசைஇன்றி வேறு ஓசை வருமாயின் அவை கலிவிருத்தம் ஆகும் எனவும் வேறுபாடு கூறுகின்றார்.

திருமந்திர பாடல்கள் எல்லாம் நாற்சீர் அடி நான்கால் கலி ஓசை இன்றி வந்த கலிவிருத்தப் பாடல்கள் என்க.

யாப்பருங்கல விருத்தி உரை சொல்லும் ஒரு செய்தி:

யாப்பருங்கலத்தில் செய்யுளியல் புறநடையில் ‘‘செய்யுள் களெல்லாம் தமக்கு ஓதிய இலக்கணங்களில் மிக்கும் குறைந்தும் வரும்’’ [93] என்று கூறும் பகுதியுள் ‘‘ஆரிடச் செய்யுள்’’ என்ற ஒன்றைச் சுட்டி, ஆரிடம் என்பது உலகியல் செய்யுள் கட்கு ஓதிய உறுப்புக்களில் மிக்கும் குறைந்தும் கிடப்பன’’ எனக் கொள்க என்று எழுதிவிட்டு, அவ்ஆரிடச் செய்யுள் பாடுதற்கு உரியர், ஆக்குதற்கும் கெடுத்தற்கும் ஆற்றல் உடை யார் ஆகி, முக்காலத்துப் பண்பும் உணரும் இருடிகள் எனக் கொள்க, என்று கூறிவிட்டு, பெருஞ்சித்திரனார் செய்யுளும், ஔவையார் செய்யுளும், பத்தினிச் செய்யுளும் முதலாக உடையனயெல்லாம் எப்பாற்படும்? எனில் அவை ஆரிடப்போலி என்றும், ஆரிட வாசகம் என்றும் வழங்கப்படும் என்க.

இவையெல்லாம் இருடிகள்அல்லா ஏனையோராகிய மனத்தது பாடவும், சாவவும், கெடவும் பாடல் தரும் கபில, பரண, கல்லாட, மாமூலர், பெருந்தலைச்சாத்தன் என்னும் இத்தொடக்கத் தோரானும், பெருஞ்சித்திரனார் தொடக்கத்தோரானும் ஆரிடச் செய்யுள்போல மிகவும், குறையவும் பாடப்படுவன என்க. என்னை,

''மனத்தது பாடும் மாண்பி னோரும்
சினத்தில் கெடப்பாடும் செவ்வி யோரும்
முனிக்கணச் செய்யுள் மொழியவும் பெறுப''

என்பது பாட்டியல்மரபு ஆதலின்;

வரலாறு:—

இலைநல வாயினும் எட்டி பழுத்தால்
சூலைநல வாங்கனி கொண்டுண லாகா-விலையாள்
முலைநலங் கொண்டு முறுவல்செய் வார்மேல்
வினையுடை நெஞ்சினை வேறுகொ ளீரே.

(திருமந்திரம்-204)

இம்மூலர் வாக்கு மிக்கு வந்தவாறு கண்டுகொள்க என்று யாப்பருங்கல விருத்தி உரை கூறும். இவற்றைக் கருதினால் வேதவியாசர் போன்ற ஆரிய ரிஷிகள் போன்றோரால் மிக்கும், குறைந்தும் வர பாடும் தமிழ்ப்பாடல்கள் எல்லாம் ஆரிடம் என்றும், கபில, பரண, கல்லாட, மாமூலர், பெருந்தலைச் சாத்தன் முதலானோர்களால் மிக்கும், குறைந்தும் வர பாடப்படும் தமிழ்ப் பாடல்கள் ஆரிய ரிஷிகள் போன்றோர் பாடும் ஆரிட பாட்டாகாமல் கபில, பரண, கல்லாட மாமூலர் என்னும் தமிழ்ச்சான்றோர் களாகிய முனிவர்களால் மிக்கும், குறைந்தும் வர பாடப்படும், ஆரிடவாசகம் என்னும் செய்தி நமக்குப் புலனாகின்றது.

இதனாலே நமக்குப் பெறப்படுவது என்னவென்றால் திருமூலருக்கு ''மாமூலர்'' என்று ஒரு பெயர் இருத்தலையும், அவர் ஆரியவர்க்கத்தினர் அல்லர் என்பதையும், அவர் முனிவர் என்கின்ற நிலையைப் பெற்றிருந்தார் என்பதையும் நாம் அறிந்து கொள்வதோடு, அவர்பாடிய ''இலை நலம்'' என்ற பாட்டு நாலடிக்கு மேல் விலையாள் என்ற சீரை மிகுதியாகப் பெற்று வந்துள்ளது என்ற செய்தியையும் நாம் அறிந்து கொள்கின்றோம்.

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே''

என்று இவரே கூறுதலின், திருமூலர் ஆரிய ரிஷிகளைப் போலக் கருதப்பட்ட மாமூலர் என்ற பெயர்பெற்ற தமிழ்ச்சான்றோர் ஆவர் என்னும் செய்தி புலனாகின்றது. தற்போது உள்ள திருமந்திரப் பதிப்பில்,

''இலைநல வாயினும் எட்டி பழுத்தாற்
குலைநல வாங்கனி கொண்டுண லாகா
முலைநலங் கொண்டு முறுவல்செய் வார்மேல்
விலகுறு நெஞ்சினை வெய்துகொள் ளீரே''

(திருமந்திரம் - 204)

என்ற வடிவில் காணப்படுகிறது.

முடிவுரை:

இவ்வாறு சிறந்த திருமந்திரத்தைக் கற்பவர் எல்லோரும் முதலாவதாகிய உபதேசம் என்ற பகுதியைத் தெளிவாகப்படித்து அறிந்துகொண்டு, முந்நூறு மந்திரத்தையும், மூவாயிரம் தமிழையும் படித்து உணரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மங்கல வரம்

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய்வி ரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான்தழைத்து ஓங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

(பெருந்திரட்டு)

2. திருமூலரின் முப்பது உபதேசம்

தோற்றுவாய்

மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவ ரன்றே. (99)

மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரைசெய்த முப்பது உபதேசம்
மூலன் உரைசெய்த மூன்றும் ஒன்றாமே. (3046)

மேலே குறிப்பிட்ட இரண்டு பாடல்களையும் ஒருங்கு இணைத்து நோக்கினால் திருமந்திரம், ''மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்'', மூலன் உரை செய்த முந்நூறு மந்திரம்'', மூலன் **உரைசெய்த முப்பது உபதேசம்**'' என்னும் மூன்று பகுதியாக இருத்தலை அறிந்து கொள்கின்றோம்.

திருமூலர், தம்வரலாற்றில் தம்முடைய கொள்கை, ''**சதாசிவ தத்துவம் முத்தமிழ் வேதம்**'' (76) என்று குறிப் பிட்டுள்ளார். அவர் அவ்வாறு குறிப்பிட்ட அம்மூன்றுடன் இம் மூன்று பகுதியும் எண்ணால் ஒத்திருத்தலை அறிஞர் உணர்ந்து கொள்க.

இவற்றுள் மூலன் உரைசெய்த மூன்றுள் ஒன்றாகிய முப்பது உபதேசம் என்னும் பகுதி முதலாவதாக அமைய

வேண்டும் என்க. ஆனால், இப்பகுதி இப்பொழுது பாயிரத்துள் கடவுள் வாழ்த்து, வேதச்சிறப்பு, ஆகமச்சிறப்பு, குருபாரம்பரியம், திருமூலர் வரலாறு, அவையடக்கம், திருமந்திரத் தொகைச் சிறப்பு, குருமட வரலாறு, மும்மூர்த்திகளின் முறைமை என்ற ஒன்பது தலைப்புகளுக்குப் பின் முதல் தந்திரத்தின் தொடக் கத்தில் ''உபதேசம்'' என்ற முதல் தலைப்பில் அமைந்துள்ளது. இவ்வுபதேச முப்பது பாடல்களும்,

''அந்தம் முதலாத் தொடுப்பது அந்தாதி''

(யா. காரிகை 17) என்னும் யாப்பிலக்கண விதிப்படி அந்தாதிப் பாடல்களாகவே வந்துள்ளன.

அந்தாதி

தொல்காப்பியர் செய்யுளியலில், தொடைகளைக் கூறு மிடத்து, மோனை முதலான ஐந்து தொடைகளையும், வேறுசில தொடைகளையும் கூறியுள்ளார். அவர், அந்தாதித் தொடையைக் கூறவில்லை. பிற்காலத்தில் வந்த யாப்பருங்கலம் முதலான நூல்கள் அந்தாதித் தொடையைக் கூறுகின்றன. திருமூலர், இவ்வுபதேசத்தை அந்தாதியாக இயற்றியுள்ளதால் இவர் காலம் தொல்காப்பியத்திற்குப்பின் யாப்பருங்கலம் முதலான நூல்கள் எழுந்த காலத்திற்கு முன் இருந்திருக்க வேண்டும் எனத் தெரிகின்றது.

இவ்வுபதேசப் பகுதியின் முதல் பாட்டு, **''விண்ணின்று இழிந்து''** என்று தொடங்கி, இறுதிப்பாட்டாகிய முப்பதாவது பாட்டில் **''புண்ணியராயினார் வேதம் துதித்திடப் போயடைந்தார் விண்ணே''** என்று முடிகின்றது. இத்தகைய தொடை அமைப்பைக் கொண்ட இம்முப்பது பாடல்களும் அரிய கருத்துக்களைக் கொண்டவையாகும். இனி முப்பது பாடல் களையும் அவற்றின் உரைகளையும் காண்போம்.

களிம்பறுத்தல்

விண்ணின்று இழிந்து வினைக்குஈடாய் மெய்கொண்டு
தண்நின்ற தாளைத் [1]தலைக்காவல் முன்வைத்து
உள்நின்று உருக்கி ஓர்ஒப்பிலா ஆனந்தக்
கண்நின்று காட்டிக் களிம்பறுத் தானே. (113)

பாடபேதம்:

[1]தலைக்காவல் மேல்வைத்து.

இம்முதல் பாட்டிற்கு அடுத்த பாட்டில் வருகின்ற "கண்ணுதல் நந்தி" என்ற சொல்லை இப்பாட்டிற்கு எழுவாயாக அமைத்துக்கொள்க.

பதப்பொருள்:

கண்ணுதல் நந்தி விண்ணின்று இழிந்து:

விழியை நெற்றியின்கண் பெற்றுள்ள நந்தி என்னும் சிவபெருமான், தான் அகளமாய் வாழும் ஞானாகாயத்திலிருந்து மக்களுக்கு அருள் செய்வதற்காக, கீழ்முகமாக இறங்கி இந்த நிலவுலகத்திற்கு வந்து அருள் செய்வர். இறைவன் கீழ்முகமாக இறங்கி வருதலை அவதாரம் என்பர்.

வினைக்கு ஈடாய் மெய்கொண்டு:

இந்த நிலவுலகத்தில் மக்கள்நலம் கருதி தான்செய்யக் கருதிய நற்செயலுக்குத் தகுதியாக மக்கள் உடம்பில் யாருடைய உடம்பையாவது தேர்ந்தெடுத்து, அவ்வுடம்பில் தான் ஆவேசித்துச் சகளமயமாய்,

களம் — வடிவம்

அகளம் — வடிவம் அற்றது

சகளம் — வடிவத்துடன் கூடியது.

தண்நின்ற தாளை தலைக்காவல் முன்வைத்து:

பிறவிநோய் என்னும் வெப்பத்திற்குக் குளிர்ச்சியாய் நிற்கும் குருபாதம் என்றும், பூங்கழல் என்றும் திருவடி என்றும் கூறப் படும் மகாவாக்கிய ஞானமாகிய அடியை முதன்மையாக வைத்து,

உள்நின்று உருக்கி:

ஆவேசித்தவருடைய உள்ளத்திலே தான்நின்று அவரை உருகச் செய்து,

ஓர் ஒப்பிலா ஆனந்தக்கண் நின்று காட்டி:

ஒன்றாகி உவமையற்றதும், ஆனந்தத்திற்கு இடமானதும் ஆகிய அசிபதப் பொருளை முன்நின்று அறிவித்து,

களிம்பு அறுத்தான்:

உயிர்களிடத்திலே செம்பில் களிம்புபோல இயல்பாய் உள்ள ஆணவ மலத்தை நீக்கினான் என்றவாறு.

ஏகாரம் — அசை.

முடிவு:

கண்ணுதல் நந்தி இழிந்து, கொண்டு, முன்வைத்து, உருக்கி, நின்று, காட்டி, களிம்பறுத்தான்.

விளக்கம்:

முப்பது உபதேசம் என்பது, முப்பது என்ற எண்களையுடைய உபதேச மொழிப் பாடல்களைக் குறிக்கும்.

உபதேசம் என்னும் சொற்றொடர் உப+தேசம் என்று இரண்டு சொல்லாகப் பிரிக்கப்படும். 'உப' என்றால் ஒருங்கு

என்று பொருள். 'தேசம்' என்றால் இடம் என்று பொருள். ஒருங்காகிய தேசம் என்று பொருள் படுவதால் இத்தொடர் பண்புத் தொகைச் சொல்லாகும்.

ஆசிரியனும் மாணவனும் ஒருங்காகிய இடத்தில் [அருகருகே] இருந்து கொண்டு, ஆசிரியன் மாணவனுக்குக் காதில்படும்படி கூறும் அருள்மொழிகளைக் குறிப்பதால் இவ்வுப தேசம் என்னும் பண்புத்தொகை, பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும்.

ஆசிரியனும் மாணவனும் தூரமான இடத்தில் இல்லாமல் அண்மையான இடத்தில் இருந்து கொண்டு உபதேச மொழி களைக் கேட்க வேண்டும். இக்கருத்தைக் கைவல்யம் என்னும் நூல் தன் மாணவனைக், **''கிட்டவா என இருத்திக் கிருபை யோடு அருள் செய்வாரே''** [தத்துவ விளக்கப்படலம் – 80] என்று கூறும்.

களிம்பறுத்தானே என்பதற்கு, உயிர்களிடத்திலே செம்பில் களிம்புபோல் இயல்பாக உள்ள ஆணவ மலத்தை நீக்கினான் என்று பொருள் கொள்க. இக்கருத்தைக் கீழ்வரும் சிவஞான சித்திப் பாடலால் உணர்க.

ஒன்றதாய் அநேக சத்தி
யுடையதாய், உடனாய், ஆதி
அன்றதாய், ஆன்மா வின்தன்
அறிவொடு தொழிலை ஆர்த்து
நின்றுபோத் திருத்து வத்தை
நிகழ்த்திச்செம் பினில்களிம் பேய்ந்(து)
என்றும் அஞ் ஞானம் காட்டும்
ஆணவம் இயைந்து நின்றே''

(சித்தியார் சுபக்கம் – 170)

மேற்பாடலில், 'செம்பினில் களிம்பு ஏய்ந்து' என்றும் 'அஞ்ஞானம் காட்டும் ஆணவம் இயைந்து நின்றே' என்றும் வரும் பகுதியை நோக்கினால் ஆணவமலம் ஆன்மாவுடன் செம்பில் களிம்பு போல இயல்பாய் இருந்து கொண்டே அறியாமையைச் செய்யும் என்னும் பொருளை உணர்ந்து கொள்கின்றோம்.

ஆணவம் செய்யும் அறியாமையைக் கண்ணுதல் நந்தி, வினைக்கு ஈடாய் மெய்கொண்டு, செய்யும் உபதேச மொழியால் நீக்குதலால் களிம்பறுத்தானே என்றார்.

மேற்கூறிய செய்திகளைத் தமிழிலுள்ள சைவ சித்தாந்த சாத்திரங்களின் முதலாவதாகிய திருவுந்தியார்,

''அகளமாய் யாரும் அறிவரிது அப்பொருள்
சகளமாய் வந்ததென்று உந்தீபற
தானாகத் தந்ததென்று உந்தீபற'' (1)

என்று கூறும். இதற்கு விளக்கமாக இதன் வழிநூலாகிய திருக்களிற்றுப் படியார் கூறும் பாடல் வருமாறு:

''அகளமய மாய்நின்ற அம்பலத்தெங் கூத்தன்
சகளமயம் போல்உலகில் தங்கி—நிகளமாய்
ஆணவ மூல மலம்அகல ஆண்டான்காண்
மாணவக என்னுடனாய் வந்து'' (4)

இப்பாட்டின் பொருள்.

வடிவம் இல்லாமல் ஞான ஆகாயத்தில் எழுந்தருளியிருந்த ஆனந்தக் கூத்தனாகிய கண்ணுதல்நந்தி, இந்நிலவுலகத்தில் ஏதாவது ஒரு வடிவத்தில் ஆவேசித்து வந்து தங்கி பக்குவ முள்ள ஆன்மாக்களுக்கு ஆணவ மலத்தை நீக்கி ஆட்கொண்டான்.

மேற்பாட்டு ஆசிரியன் மாணவனுக்குக் கூறும் கூற்றாக அமைந்துள்ளது. அப்பாட்டில், ''என்னுடனாய் வந்து'' என்பதற்குப் பொருள், ''கூத்தன் ஆசிரியனாகிய என்னுடம்பில் ஆவேசித்து உடனாய் இருந்து கொண்டு, மலம்அகல ஆண்டான்'' என்பதாம்.

மேற்குறித்த திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார் என்ற இரண்டு பாடல்களும் திருமூலரின் உபதேச முதற்பாடலை உட்கொண்டது.

திருவாசகக் குயில்பத்தும் ''சூழ்சுடர் ஞாயிறு போல அந்தரத்தே நின்றிழிந்திங்கடியவர் ஆசை அறுப்பான்'' (5) என்று கூறும்.

பளிங்கில் பவளம் பதித்தல்

2. களிம்பறுத் தான்எங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பறுத் தான்அருள் கண்விழிப் பித்துக்
களிம்பணு காத கதிரொளி காட்டிப்
பளிங்கில் பவளம் பதித்தான் பதிக்கு. (114)

பதப்பொருள்

எங்கள் கண்ணுதல் நந்தி களிம்பறுத்தான்:

எங்கள் நந்தி, வினைக்கு ஈடாய் மெய்கொண்டு, ஆன்மாக்களின் களிம்பு போன்ற ஆணவ மலத்தை நீக்கினான் என்று முதல் பாட்டில் படித்தோம். (அவன் எவ்வாறு நீக்கினான் என்று வினாவில்)

அருள்கண் விழிப்பித்துக் களிம்பறுத்தான்:

திரோதானசத்தி என்ற பெயரால் இருந்து கொண்டு ஆன்மாவின் ஆணவ மலத்தை இயக்கிக் கொண்டிருக்கும் தன்

நிலையை மாற்றி, தான் அருளாக மாறி, ஆன்மாவினிடத்தில் அருள்கண்ணாய் அமைந்து, அவ்அருட்கண்ணால் ஆன்மாவின் களிம்பை அறுத்தான் என்க.

இறைவனுடைய திரோதான சத்தி, ஆன்மாவின் மும்மலங் களைச் செயல்படுத்தும் என்பதை,

''ஏயும் மும்மலங்கள் தம்தம் தொழிலினை இயற்ற ஏவும்
தூயவன் தனதோர் சத்தி திரோதான கரிய தென்றும்''

[சித்தியார் சுபக்கம் – 177]

என்ற இப்பாட்டால் அறிக.

''திரோதை அருள் ஆனதே கண்டயாய் அறி'' [துகளறு போதம் — 30] என்னும் பாட்டால் இறைவனுடைய திரோதான சத்தி ஆன்மாவின் பக்குவக் காலத்தில் அருட்கண்ணாக மாறி விடும் என்பதை உணர்க.

களிம்பு அணுகாத கதிரொளி காட்டிப் பதி பளிங்கில் பவளம் பதித்தான்:

பதியாகிய இறைவன் ஆணவ மலக்களிம்பு அணுகாத நல்ல ஞானம் என்கின்ற ஒளியை ஆன்மாவிற்கு உண்டாக்கி, பளிங்கு போன்ற ஆன்மாவின் தூயஉணர்வில் தன் அருள்சக்தியாகிய பவளத்தைப் படிப்படியாகப் பதிய வைத்தான் என்க. அருட்கண் பதிவித்தலை சத்திநிபாதம் என்பர்.

விளக்கம்:

நிபாதம் — பதியவைத்தல்,

பளிங்கு — ஆன்மாவில் களிம்பு நீங்கிய தூய உணர்வு.

பவளம் — இறைவனுடைய திருவருள் சக்தி.

ஆன்மாவின் உணர்வில் இறைவன் தன்னருள் சக்தியைப் பதியவைத்தால் ஆன்மாவிற்குச் சிவனை அடையும் பற்று படிப்படியாய் வளரும் என்க. அவ்வாறு வளரும் போது முதலில் மந்தமாகவும், அதனில் மேற்பட்டு மந்ததரமாகவும், பின் தீவிர மாகவும் பின் தீவிரதரமாகவும் ஆகிய நான்கு நிலைகளில் வளரும்.

மந்த சத்திநிபாதத்தை,

இருட்டறை மூலை இருந்த கிழவி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி அவனை மணம்புரிந் தாளே, (1514)

"இருட்டறை மூலை இருந்த கிழவி" என்பது ஆன்மாவின் கேவலாவத்தையில் ஆன்மாவை மறைத்துக்கொண்டிருந்த இறைவனுடைய திரோதாயி என்னும் ஆதிசத்தியைக் குறிக்கும். "குருட்டுக் கிழவன்" என்பது ஆணவ மலத்தால் மறைக்கப்பட்டு அறியாமையைப் பெற்றிருக்கின்ற ஆன்மாவைக் குறிக்கும். "குருட்டினை நீக்கி" என்பது அருட்கண் விழிப்பித்து என்று பொருள்படும்.

மந்ததர சத்திநிபாதத்தை,

"மருட்டிப் புணர்ந்து மயக்கமும் நீக்கி
வெருட்டி வினையறுத்து இன்பம் விளைத்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
அருள்திகழ் ஞான மதுபுரிந் தானே. (1518)

என்று திருமந்திரம் கூறும். இச்சத்திநிபாதத்தால் பதி, துருள்திகழ் ஞானத்தை அருள் செய்வார்.

தீவிரம் என்ற சத்திநி பாதத்தை,

''அண்ணிக்கும் பெண்பிள்ளை அப்பனார்தோட்டத்தில்
எண்ணிக்கும் ஏழேழ் பிறவி உணர்விக்கும்
உண்ணிற்பது எல்லாம் ஒழிய முதல்வனைக்
கண்ணுற்று நின்ற கனியது வாகுமே, (1528)

என்று திருமந்திரம் கூறும். இத்தீவிரதரம் ஏழேழ் பிறவி நிலையை உணர்த்தும். உள்ளத்தில் உள்ள பற்றை நீக்கும். இறைவனைப் பற்றச் செய்யும்.

தீவிரதரம் என்ற சத்திநிபாதத்தை,

''இருவினை நேரொப்பில் இன்னருள் சத்தி
குருவென வந்து குணம்பல நீக்கித்
தருமெனு ஞானத்தால் தன்செய லற்றால்
திரிமலம் தீர்ந்து சிவனவ னாமே'' (1527)

என்று திருமந்திரம் கூறும். இத்தீவிரதர சத்திநிபாதத்தின் பயன் திரிமலம் தீர்ந்து சிவனாதலே ஆகும்.

3. **''பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்**
பதியினைப் போல்பசு பாசம் அநாதி
பதியினைச் சென்று அணு காப்பசு பாசம்
பதியணு கில்பசு பாசம் நிலாவே.'' (115)

பதப்பொருள்

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்:

பதி என்றும், பசு என்றும், பாசம் என்றும் கூறப்படும் சைவசமய தத்துவங்கள் மூன்றில்,

பசுபாசம் பதியினைப் போல் அநாதி:

பசு என்ற உயிரும், பாசம் என்கின்ற பந்தமும், பதி என்னும் முதற்பொருளைப் போல, தோற்றம் அறிய முடியாத தொன்மையான பொருளாகும்,

பசுபாசம் பதியினைச் சென்று அணுகா:

தொன்மையான பசு என்னும் உயிரும், அதனைக் கட்டிய பாசமும் ஆக இரண்டும், பதியாகிய முதற்பொருளைச் சென்று அணுகாவாம்,

பதி அணுகில் பசு, பாசம் நிலாவே:

பதியாகிய முதல்வன் பசு, பாசத்தை அணுகினால் பசு, பசுத்தன்மையுடன் நில்லா. ஒளிமுன் இருள்போல பாசம் சூனியமாய் விடும்,

விளக்கம்:

சைவ சமய தத்துவம் பதி, பசு, பாசம் என மூன்றாகும். இம்மூன்றுள் பதியும், பசுவும் முறையே பேரறிவுப் பொருளும், சிற்றறிவுப் பொருளும் ஆகும். பாசம் சடப்பொருள் ஆகும்,

பதி–தலைமையான பொருள் ஆகும். பசுவாகிய உயிர்–தலைமையில்லாத பொருள்ஆகும்.

பதி–பேறாய் இருப்பது. பசு–பேற்றினைப் பெறுவது. பாசம் உயிரைக் கட்டுவது. இம்மூன்று பொருள்களும் தோற்றம் அறிய முடியாத தொன்மைப் பொருள் என்ற செய்தியை முன் இரண்டடிகள் கூறுகின்றன.

பசு என்னும் உயிர் பதியினைச் சென்று அணுகினால் பசுத்தன்மையுடன் (கட்டுற்ற தன்மையுடன்) இறைவனை அணுகாது, பசுத்தன்மை நீங்கியே அணுகும். பாசம் என்பது முதற்பொருளாகிய பதிமுன் "ஒளிமுன் இருள்போல" நில்லாது போய்விடும். ஆகையால் மூன்றாவது அடி பசு பாசம் பதியினைச்சென்று அணுகா என்று கூறுகின்றது.

பதி, பசுவை அணுகினால் பசுவிற்குள்ள பாசத்தன்மை கெட்டு விடுதலின், பசுத்தன்மையோடு நில்லா என்றார். பாசம் இருள் போன்ற தாதலின் ஒளிப் பொருளாகிய பதிமுன் நில்லாத தாயிற்று. அதனால் பதி அணுகில் பசு, பாசம் நிலாவே என்று கூறினார்.

பதி பசு பாசம் என்றதைப் பற்றிய விளக்கம்:

பேரறிஞரும், பேரூரில் வாழ்ந்தவருமாகிய தவத்திரு. சாந்தலிங்க அடிகளார், இயற்றிய அவிரோதவுந்தி என்ற நூலில், திருமூலர் கூறிய பதி என்றதைப் பரன் என்றும், பசு என்பதைச் சீவன் என்றும், பாசம் என்றதைப் பந்தம் என்றும் வேறு சொற்களால் அமைத்துக்கொண்டு கீழ்வருமாறு கூறுகின்றார்.

"சுருதிகள் சொல்பல் சமயத் துணிவும்அப்
பரசீவ பந்தமென்றுந் தீபற
பகர்நாமம் வேறுவே றுந்தீபற

(அவிரோதவுந்தி 36)

இதன் பொருள்:–

வேதங்களிலே கூறப்பட்ட பலவகை சமயங்களினது துணிவும் யாது எனில்? பரசீவ பந்தம் என்னும் மூவகைப் பொருள்களையும் உணர்த்துதலாம். அச்சமயிகள் அவற்றிற்குத் தம்தம்

கொள்கைகளால் கூறாநிற்கும் குறியீட்டுச்சொற்கள் வெவ் வேறாய் இருக்கும் மற்று, பின்வரும் வேறு பாட்டில்:-

பல்லோர் துணிவும் பராதிமூன் றும்தேர்தல்
அல்லால்வே றில்லேனும் உந்தீபற
அவரவர் கொள்கைவேறு உந்தீபற

(அவிரோதவுந்தி - 41)

என்பது வீட்டுநெறி ஆராயும் பல சமயிகளுடைய துணிவும், பரசீவ பந்தங்கள் என்னும் மூன்றையும் ஆராய்தலே அன்றி வேறு இல்லை என்றாலும், அந்த மூன்றுவகைப்பொருள்களினது உண்மைகளை அவர்அவர் கருதிக்கொள்ளும் கொள்கைகள் வெவ்வேறாய் இருக்கும் என்றவாறு என்பர்.

மேற்கூறிய இரண்டு பாட்டின் பொருள்களையும் கருதினால் திருமூலர் கூறும் பதி, பசு, பாசம் என்னும் மூன்றுவகைப் பொருள்களைப் பற்றிய செய்தி, சுருதிகள் சொல்கின்ற பல சமயவாதிகளின் துணிவாகவும் இன்னும் பலருடைய துணி வாகவும் இருக்கும் என்பதை நாம் அறிந்து கொள்கின்றோம்,

பல்லோர் என்பது:- சைவ, வைணவ சமயத்தோரே அன்றி, இக்காலத்திய மகமதியர், கிருத்துவர் முதலான மலரையும் குறிக்கும் என்க.

திருமூலர் சொல்லும் பதி, பசு, பாசம் என்பது சைவ சமயக் கொள்கைகள் மட்டும் அல்லாமல் பல சமயவாதி களுடைய துணிவாகவும் உள்ளது என்பதை அறிஞர் உணர்ந்து கொள்க.

காயக் கடவுள்

4. ''வேயில் எழும்கனல் போலேஇம் மெய்யெனும்
கோயில் [1]எழுந்து குடிகொண்ட கோன்நந்தி
தாயினும் மும்மலம் மாற்றித் தயாஎன்னும்
தோயம தாய்எழும் சூரியன் ஆமே'', (116)

பாடபேதம்:

[1]இருந்து

இப்பாட்டு, உடம்பின்கண் வாழும் காயக்கடவுள் என்னும் அறிவுப் பொருளைப் பற்றிய செய்தியைத் தெளிவாகக் கூறுகின்றது.

பதப் பொருள்

வேயில் எழும் கனல் போலே:

மூங்கிலிலிருந்து தோன்றும் நெருப்பைப் போலே

இம்மெய்யெனும் கோயில் எழுந்து குடிகொண்ட கோன் நந்தி:–

இந்த உடம்பு என்கின்ற கோயிலின்கண் உண்டாகி யிருந்து அதனைத் தான் குடியிருக்கும் இடமாகக் கொண்டு விளங்குகின்ற தலைவனாகிய நந்தி என்னும் பெயருடைய காயக்கடவுள்.

தாயினும் மும்மலம் மாற்றி:–

இத்தூல உடம்பைப் பெற்ற தாயைக் காட்டிலும் பேரன்பு கொண்டு தூல உடம்பில் உள்ள மலத்தை அன்றி, சூக்கும உடம்பில் உள்ள மலம், காரண உடம்பில் உள்ள மலம் என்னும் மாயை, கன்மம், ஆணவம் என்னும் மூன்று மலங்களையும் நீக்கி.

தயா என்னும் தோயமதாய் எழும் சூரியனாமே:-

அருள் என்கின்ற நீர்நிரம்பிய கடலை இடமாகக் கொண்டு அதில் உதித்து இருளை எல்லாம் போக்குகின்ற சூரியன் ஆகும் என்க.

ஏகாரம் – ஈற்றசை.

விளக்கம்:

மெய், கோவிலாக உருவகிக்கப்பட்டது. அக்கோவிலில் உயிரே அன்றி உயிருக்குத் துணைபுரிவதாய் ஒரு தெய்வம் இருக்கின்றது. அதைத்தான் திருமூலர் மெய்யெனும் கோயில் இருந்து குடிகொண்ட கோன் நந்தி என்று குறிப்பிடுகின்றார்.

இந்த நந்தியைத் திருமூலர் திருமந்திரத்துள் காயக்கடவுள் என்றும், வேங்கடநாதன் என்றும் இன்னும் பல பெயர்களால் குறிப்பிட்டுள்ளார். இப்பாட்டில் அக்காயக்கடவுள், ஈன்ற தாயைக் காட்டிலும் அன்பு கொண்டு விளங்கி, மும்மலங்களையும் மாற்றுகின்ற சூரியனாய் உள்ளார் என்று குறிப்பிடுகின்றார்.

''தாயினும் மும்மலம் மாற்றி'' என்ற பகுதிக்குத் திருவாசகம் பிடித்தபத்துள்

''பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே!
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்து அருளுவது இனியே.''

(பிடித்தபத்து – 9)

என்ற பாடலை ஒப்பு நோக்குக. இப்பாட்டில் வந்துள்ள ''**புறம் புறம் திரிந்த**'' என்ற தொடர் காயக்கடவுளாகிய பரதுரியத்திற்கு உரிய செயலாகும். அதனால் இப்பாட்டு அசிபதசிவத்தைக் குறிக்காது. ''**தாயிற் சிறந்த தயாவான தத்துவனே**'' என்று சிவபுராணம் கூறுவதையும் ஒப்பு நோக்குக.

திருமூலர் தம்முடைய வேதாந்தக் கொள்கைக்குச் 'சதாசிவ தத்துவம் முத்தமிழ் வேதம்' என்று பெயர் சூட்டுகின்றார். எப் பொழுதும் சிவத்தையே கருதியிருக்கும் கொள்கையை உடைய மூன்று இனிய அறிவுப் பொருள்களைக் கருதிய வேதாந்தப் பகுதி என்பது அவர் சுட்டிய பெயருக்குப் பொருளாகும்.

முத்தமிழ் வேதம் என்பது இயல், இசை, நாடகம் என்கின்ற மூன்றையோ அல்லது அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையோ இங்கு குறிக்கவில்லை. மகாவாக்கியத்துள் துவம்பதப் பொருளால் ஆராயப்படும் சீவதுரியத்தையும், தத்பதப் பொருளால் ஆராயப்படும் பரதுரியத்தையும், அசிபதப் பொருளால் ஆராயப் படும் அகண்ட சிவத்தையுமே குறிக்கும் என்க.

குதம்பைச் சித்தர் சீவதுரியம் முதலான மூன்று பொருளைக் கருதி,

''**முத்தமிழ் கற்று முயங்கும்மெய் ஞானிக்கு**
சத்தங்கள் ஏதுக்கடி''

என்பார்.

கோயில் எழுந்து குடிகொண்ட கோன் என்று இப்பாட்டில் கூறிய காயக்கடவுள் மேற்கூறிய மூன்று அறிவுப் பொருள்களுள்

தத்பதப் பொருளாகிய பரதுரியம் ஆகும் என்க. இதனைத் திருமூலரும், மாணிக்கவாசகரும் உறுபொருள் என்பர். மிக்க பொருள் என்பது இதனுடைய பொருள்.

உடம்பிலே உள்ள சீவன், பரன் என்கின்ற இரண்டு பொருள்களுள், பரன் என்பது மிக்க பொருளாய், முன்னிலைப் பொருளாய் இருத்தலின் இப்பெயர் பெற்றதென்க.

கீதையும் க்ஷரபுருஷன், அட்க்ஷரபுருஷன், புருஷோத்தமன் ஆகிய உத்தமபுருஷன் என்று மூன்று பெயரால் சீவதுரியம், பரதுரியம், சிவதுரியம் ஆகிய இவற்றைக் குறிக்கும் என்க.

''கோயிலின் உள்ளே குடிசெய்து வாழ்பவர்
தாயினும் நல்லார் தரணி முழுதுக்கும்
காயினும் நல்லவர் காய்ந்தவர் தம்முளும்
தீயினும் தீயர் அத் தீவினை யாளர்க்கே.''

(திருமந்திரம் 811)

மூன்றாம் தந்திரம் கேசரியோகத்தில் வரும் இப்பாடலை நோக்குக.

குறிப்பு: யான் எழுதி வெளியிட்டுள்ள **''காயத்துள் நின்ற கடவுள்''** என்ற நூல் காயக்கடவுளின் தத்துவத்தை உணர்த்தும்.

ஆரியன் முன்தோன்ற மலங்கள் அற்றன

5 ''சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதி யில்சுடும் ஆறுபோல்
ஆரியன் தோற்றமுன் அற்ற மலங்களே'' (117)

பதப்பொருள்

சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே:

சூரிய காந்தமாகிய மாணவனும், அவனைப் பற்றியுள்ள மலங்களாகிய சூழ்ந்த பஞ்சும் ஒப்பனையால் விளங்கும்.

சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா:

சாதாரண நிலையில் சூரிய காந்தக்கல் தன்னைச் சூழ்ந் துள்ள பஞ்சினைச் சுடாவாம். அதுபோல போதத்தைப் பெறாத நிலையில் மாணவன் தன்னைப் பற்றியுள்ள மலத்தைப் போக்க முடியாதவனாய் இருப்பன்.

சூரியன் சந்நிதியில் சுடும் ஆறுபோல்:

பஞ்சினைச் சுடும் ஆற்றல் இல்லாத சூரிய காந்தக் கல் பின்னர் சூரியனுடைய சந்நிதானத்தைப் பெற்றபோது சூரிய னிடத்தில் இருந்து வெப்பத்தைப் பெற்று, முன்பு சுடாத பஞ்சினை இந்த நிலையில் சுடுவது போல.

ஆரியன் தோற்றமுன் மலங்கள் அற்ற;

ஞானாசிரியனாகிய ஆசிரியன் முன் மாணவன் அடைந்து அவருடைய சிறந்த அறிவாகிய பர அறிவைப் பெற்ற நிலையில் மலங்கள் எல்லாம் நீங்கின.

சிவஞான சித்தி,

''சூரியகாந் தக்கல்லின் இடத்தே செய்ய
சுடர்தோன்றி யிடச்சோதி தோன்று மாபோல்
ஆரியனாம் ஆசான்வந்து அருளால் தோன்ற
அடிஞானம் ஆன்மாவில் தோன்றும்''

(சிவஞானசித்தியார் 280)

என்னும் பாட்டை ஒப்பு நோக்குக.

கீழ்வரும் கைவல்யப் பாட்டினையும் கருதுக.

''துருத்தி மாயையைச் சுழுத்தியில்
சுடாததற் சொரூபஞா னந்தானே
விருத்தி ஞானமாய்ச் சுட்டதெப்
படியெனில் வெய்யிலால் உலகெங்கும்
பரித்த சூரியன் சூரிய
காந்தத்தில் பற்றிஅக் கினியாகி
எரித்த வாறுபோல் சமாதியில்
விருத்தியால் எரிக்கும் என்று அறிவாயே'' (79)

மேற்கண்ட பாட்டு மேல் கூறிய கருத்தைச் சிறிது மாற்றிச் சொல்லும். இங்கே சொரூபஞானம் என்பது இயற்கை அறிவு. விருத்திஞானம் என்பது ஆசிரியரிடத்திலே கேட்ட ஞான உணர்வு.

ஒருவருடைய இயற்கை அறிவு மாயையாகிய பந்தத்தைக் கெடுப்பதில்லை. ஆனால் ஆசிரியரிடத்திலே கேட்ட விருத்தி ஞானம் மாணவனுடைய சமாதியில் தோன்றி மாயையாகிய பந்தத்தைக் கெடுத்துவிடும் என்று மேல்பாட்டுக்குப் பொருள் கொள்க.

இதுபற்றி சிவஞான தீபம் (பாடல் 133) கூறும் கருத்தினை நோக்குக.

சூழ்ந்த பஞ்சினை, சூரியனுடைய வெயிலும் சூரிய காந்தக் கல்லும் ஒன்று சேர்ந்த பொழுதே நெருப்பினை உண்டாக்கிச் சுடுதற்கு வல்லனவாம். ஒன்றாகக் கூடாமல் வேறாகில் அவற்றால் அது சுடப்படுதல் இல்லையாம்.

மந்திரவுருவமைந்த கருடனும் கருடமந்திரத்தைச் செபித்து விடத்தினைத் தீர்ப்போனும் ஒன்று சேர்ந்த பொழுதே அமிழ்தத்தை

உண்டாக்கி விடத்தினைத் தீர்க்க வல்லனவாம்; ஒன்றாகக் கூடாமல் வேறாகில் அக்கருடனாலும் விடம் தீர்ப்போனாலும் விடம் தீராதாம்.

இவற்றை ஆராய்ந்தால், சூரியனுடைய வெயிலும் சூரிய காந்தக் கல்லும், கருடவடிவமும் அவ்வடிவைத் தியானித்து விடம் தீர்ப்பவனும் வேறற வேறாகி நின்று, முறையே பஞ்சினைச் சுடுவது போல, விடத்தினைத் தீர்ப்பது போல, உயிர்களிடத்தே அத்துவிதமாயிருக்கும் முதல்வனும் குருலிங்க சங்கமத்தோடு இயைந்து நின்று உயிர்கட்கு அருள்புரியும் நிலைமையாம்.

நந்தி ஐந்து நலங்களால் என்னை உள்நயந்தான் என்பது

6. ‘‘மலங்கள்ஐந் தாமென மாற்றி அருளித்
தலங்கள்ஐந் தால்நற் சதாசிவ மான
புலம்களைந் தான்அப் பொதுவினுள் நந்தி
நலங்கள்ஐந் தால்உள் நயந்தான் அறிந்தே.’’ (118)

என் நெஞ்சு என்னும் பொது இடத்தில் வாழும் நந்தி என்னும் காயக் கடவுள் என்னிடத்தில் தோன்றிய ஐந்து நலங்களால் என் பக்குவ நிலையை அறிந்து என்னை விரும்பி ஆட் கொண்டான் என்பது கருத்து.

பதப்பொருள்:

அப் பொதுவினுள் நந்தி:

சுட்டும்படி சிறந்த பொது என்னும் உள்ளத்தின்கண் எழுந்தருளியுள்ள நந்தி என்னும் காயக்கடவுள்.

மலங்கள் ஐந்தாம் என மாற்றி அருளி:

ஆணவம், கன்மம், மாயை, திரோதாயி, மாயேயம் எனக் கூறப்பெறும் ஐந்து மலங்களை ஆன்மாவிற்கு மாற்றி அருள் செய்து,

தலங்கள் ஐந்தால் நற்சதா சிவமான புலம் களைந்தான்:

சதாசிவம், மாகேசம், உருத்திரன், திருமால், நான்முகன் என்னும் ஐந்து தலைமைத்தலங்களால் தோன்றிய ஆகாயத்தின் கூறாகிய சத்தம், காற்றின் கூறாகிய பரிசம், நெருப்பின் கூறாகிய உருவம், நீரின் கூறாகிய சுவை, நிலத்தின் கூறாகிய மணம் என்னும் ஐந்து புலன்களையும் நீக்கினான்.

நலங்கள் ஐந்தால் உள்அறிந்து நயந்தான்:

நலங்களைத் தரும் ஐந்து என்னும் பஞ்சாக்கர மந்திர உணர்வால் என் பக்குவ நிலையை அறிந்து உள்ளம் விரும்பினான்.

விளக்கம்:

மலங்களை மூன்று என்றும், ஐந்து என்றும் அறிஞர் சொல்லுவர்.

மூன்று என்பார் ஆணவம், கன்மம், மாயை என்பர். ஐந்து என்பார் மாயையின் காரியமாகிய மாயேயத்தையும், ஆணவம் முதலான மலங்களைத் தொழில்படுத்தும் திரோத மலத்தையும் சேர்த்து ஐந்து என்பர்.

தத்துவ நூல்கள் சதாசிவ தெய்வத்தைத் தலைமையாகக் கொண்டது ஆகாயம் என்பர். மகேசன் என்னும் தெய்வத்தைத் தலைமையாகக் கொண்டது காற்று என்பர். உருத்திரன் என்னும் தெய்வத்தைத் தலைமையாகக் கொண்டது நெருப்பு என்பர்.

திருமால் என்னும் தெய்வத்தைத் தலைமையாகக் கொண்டது நீர் என்பர். நான்முகன் என்னும் தெய்வத்தைத் தலைமையாகக் கொண்டது நிலம் என்பர். இவ்ஐம்பூதத்தால் தோன்றியவை. சப்த, பரிச, ரூப, ரச, கந்தம் என்னும் ஐம்புலன்கள் என்பர்.

நலங்கள் ஐந்து என்பது நலத்தைத் தரும் ஐந்து என்று பொருள்படும், இச்சொல் தொகைக் குறிப்புச் சொல் என்க. இந்த ஐந்து என்பது எதனைக் குறிக்கும் என்பதைத் திருமூலர் வெளிப்படையாகச் சொல்லவில்லை. அதனால், ஐந்து பஞ்சாக்கரம் என்று பொருள் கொள்ளப்பட்டது. இப்பஞ்சாக்கர மந்திரத் தைப் பொருள் அறிந்து கருதிவரும் உணர்வால் நந்தி பக்குவ நிலையை அறிந்து என்னை உள்நயந்தான்.

இந்த ஐந்து என்பதற்கு,

''அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண். (983)

என்னும் திருக்குறளின்படி சான்றாண்மைக்கு முதலாகிய அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்கின்ற ஐந்தினையும் பொருந்துமேற் கொள்க.

குறி என்னும் இலக்கியார்த்தத்தை அறிவிப்பவனே குரு என்றது

7 **''அறிவுஐம் புலனுடனே நான்ற தாகி**
நெறிஅறி யாதுஉற்ற நீர்ஆழம் போல
அறிவுஅறி வுள்ளே அழிந்தது போலக்
குறிஅறி விப்பான் குருபரன் ஆமே'' (119)

ஆன்ம அறிவு ஐம்புல அறிவுடன் ஒன்றி அறிந்தால் மெய்ப் பொருளை அறிய முடியாது. தனக்கு மேல் உள்ள பர அறிவுடன் கூடி அறிந்தால் மெய்ப்பொருளை அறியமுடியும். அதனைப்

போல ஆசிரியன் ஐம்புல அறிவோடு கூடாமல், மேல் உள்ள பரம்பொருள் அறிவோடு (அ) பர அறிவோடு கூடி உண்மைப் பொருளை அறிவுறுத்தவேண்டும் என்பதை இப்பாட்டு கூறுகின்றது.

பதப்பொருள்

அறிவு ஐம்புலனுடனே நான்றது ஆகி:

ஆன்ம அறிவு தனக்குக் கீழ் உள்ள உலகப் பொருளை அறிவதற்குக் கருவியான ஐம்புல அறிவுடனே கூடியதாகி,

நீர் ஆழம்போல நெறி அறியாது உற்ற:

ஆழமான நீர்ப்பகுதியில் இயங்குபவரைப் போல, உண்மை நெறியை அறியாத நிலையைப் பெற்றது,

அறிவு அறிவுக்குள்ளே அழிந்தது போல:

(அவ்வாறின்றி) ஆன்மஅறிவு தனக்கு மேலே உள்ள பர அறிவுடன் கூடி இரண்டாகாமல் ஒன்றாகி உண்மை நெறியை அறிதலைப் போல,

குறிஅறிவிப்பான் குருபரன் ஆமே:

இலக்கான பொருளை அல்லது இலட்சியார்த்தப் பொருளை ஆன்ம அறிவும், பரஅறிவும் ஒன்றி அறியும் அறிவினால் அறிவிப்பவன் யாரோ அவன்தான் சிறந்த குருபரன் என்க.

விளக்கம்:

ஆன்ம அறிவு ஐம்புல அறிவுடன் கூடினால் உலகப் பொருள்களைத்தான் அறியமுடியும். மேல் உள்ள மெய்ப்பொருளை அறிய முடியாது. இதனைக் கருதி சசிவன்னபோதம் **''பொறிவழி சென்று மீளும் அவலமதி''** என்றும், அந்த அவல மதியைக்

கொண்டு ''**பொருரு சமயங்கள் ஆறும் பிறவிக் கடலிலே விழும்**'' என்று கூறும் பகுதியை (26) ஒப்பு நோக்குக.

மெய்ப்பொருளை அறிவதற்கு ஆன்ம அறிவும், மேல் உள்ள பரஅறிவும் சேர்ந்து இரண்டாகாமல் ஒன்றாய் நின்று அறிய வேண்டுதலின், ''அறிவு அறிவுள்ளே அழிந்தது போல'' என்று கூறினார்.

திருமந்திரம் ஏழாம் தந்திரத்துள் சற்குருநெறி என்ற தலைப்பில் வந்துள்ள கீழ்வரும் பாட்டைக் கருதுக.

''குருஎன் பவனே வேதாக மம்கூறும்
பரஇன்ப னாகிச் சிவயோகம் பாவித்து
ஒருசிந்தை யின்றி உயிர்பாச நீக்கி
வருநல் குரவன்பால் வைக்கலு மாமே'' (2057)

குரு என்பவன் வேத ஆகமம் கூறும் மேலான இன்பத்தைக் கருதியவனாகி, சிவயோக பாவனை செய்பவனாகி, வேறொரு சிந்தனையும் இன்றி, உயிரின் பாசம் நீக்கி, அந்த உயிரை குருபாதம் (அ) பூங்கழல் என்று கூறப்படும் மகாவாக்கிய ஞானத்தில் வைப்பவனே குரு என்க.

நான்ற என்ற சொல் தொங்குதல், அகலமாயிருத்தல் என்ற பொருளில் வரும். இங்கே அப்பொருள்களில் வாராமல் கூடியது என்ற பொருளில் வந்துள்ளது.

ஆனந்தக் கூத்தனுடைய நிர்த்தம்
பலகரணங்களுள் உற்றன
அதனால் விளையும் பயனைக்
கூறுகின்றது

8. **"ஆமேவு பால்நீர் பிரிக்கின்ற அன்னம்போல்**
தாமே தனிமன்றில் தன்னந் தனிநித்தம்
தீமேவு பல்கர ணங்களுள் உற்றன
தாமேழ் பிறப்பெரி சார்ந்தவித் தாமே". (120)

தாமே தனிமன்றில் தன்னந் தனிநித்தம்:–

ஆனந்தக்கூத்தர் தாமே தனித்த மன்றில் இருந்து கொண்டு, தன்னந்தனியாய்ச் செய்யும் ஞான நடனமானது,

தீ மேவு பல் கரணங்களுள்;–

பிறப்பு, இறப்பாகிய தீமை பொருந்திய பலவாகிய ஆன்ம கரணங்களுள்,

ஆமேவு பால் நீர் பிரிக்கின்ற அன்னம்போல் உற்றன:–

பசுவின் பாலில் உள்ள நீரைப் பிரித்துவிடுகின்ற அன்னம் போல் அக்கரணங்களில் உள்ளன. அதனால்,

ஏழ் பிறப்புத் தாம் எரி சார்ந்த வித்தாமே:–

ஆன்மாவுக்கு உண்டாகும் ஏழு பிறவிக்குக் காரணமான வினைகள், நெருப்பைச் சார்ந்த விதையைப் போல், ஆகி (வறுத்த நிலையைப் போல) பிறவிக்குக் காரணமாகாமல் கெடும்.

முடிவு:-

நிர்த்தம் கரணங்களுள் பாலில் உள்ள நீரைப் பிரிக்கின்ற அன்னம் போல் உற்றன. அதனால் ஏழுபிறப்புக்கள் தாம் எரிசார்ந்த வித்தாகும்.

உற்றன என்ற பன்மையால் கூத்தனுடைய நிர்த்தம் ஐந்து வகையாய் இருக்கும் என்க. அவற்றின் விளக்கத்தை ''பஞ்சாதிகாரவிளக்கம்'' என்னும் நூலில் காண்க.

விளக்கம்:-

நிர்த்தம் என்னும் வடசொல் நித்தம் எனத் திரிந்தது. இங்கு நித்தம் என்பது ஆனந்தக் கூத்தன் செய்யும் ஊன நடனம், ஞான நடனம் என்னும் இரண்டில் ஞான நடனத்தைக் குறிக்கும்.

கூத்தனுடைய ஞானநடனம் ஆன்மாக்களின் மனம் முதலான அந்தக்கரணங்களில் பொருந்தினால், அதனால் அக்கரணங்கள் தூய்மை பெற்று, ஆன்மா பிறவா நெறியைப் பெறும்.

ஆ – பசு

நித்தம் – நிருத்தம் என்கின்ற நிர்த்தம்.

அன்னம் பாலினின்றும் நீரைப் பிரிப்பது போல ஆனந்தக் கூத்தனுடைய நடனம் சீவனுடைய தீமை பொருந்திய கரணங்களிலிருந்து பிறவிக்குக் காரணமான வினையைப் பிரிக்கும்.

நெருப்பைச் சார்ந்து வறுக்கப்பட்ட வித்து முளையாதவாறு போல ஆன்மாவின் புத்தி தத்துவத்தில் பொருந்தியுள்ள பாவ புண்ணியமாகிய வினைகள் பிறவிக்குக் காரணம் ஆகா.

கீழ்வரும் வைராக்கிய தீபக் கருத்தைக் கருதுக. (101ஆவது பாட்டின் உரை)

ஒரு புருடனுக்கு அஞ்ஞான இருட்டு நீங்கித் தனக்குரிய ஞானசொரூபம் உள்ளபடியே விளங்குமாயின் இந்தத் துன்பம் செய்யாநின்ற தேகப்பற்று என்றைக்கு நீங்கும். அந்த ஞான சொரூபம் தனக்கு நேராய்வந்து லபிக்குமளவும் இறைவன் செய்யாநின்ற **பஞ்சகிருத்தியங்களை எவ்விடத்திலும் பார்த்துச்** சீவசெயலை விட்டு நீங்கிப் பயமுதலிய துர்க் குணங்கள் மனத்தின் கண்ணே பொருந்தாது மாற்றித் தவத் தினைச் செய்வதே முறைமையாம். எமது ஞானாசிரியன் நீடுழிக் காலமும் வாழக்கடவன், என்றவாறு.

சிவயோகியரின் முதல் பயிற்சி

9. ''வித்தைக் கெடுத்து வியாக்கிரத் தேமிகச்
சுத்தத் துரியம் பிறந்து துடக்கற
ஒத்துப் புலனுயிர் ஒன்றாய் உடம்பொடு
செத்திட் டிருப்பர் சிவயோகி யார்களே'' (121)

கருத்து:

சிவயோகம் பயிலும் சித்தர் முதலில் துவம்பத ஆராய்ச்சி செய்து, சீவனாகிய தன்னை உணர்ந்து கொள்ள வேண்டும். அடுத்து சீவனை இயக்குகின்ற பரனை ஆராய்ந்து அதனோடு சீவன் பரனோடு ஒன்றும் பரயோகத்தைப் பல நாள் பயில வேண்டும். அதன் பின்னரே, இப்பரனைச் சிவனோடு சேர்த்து சிவயோகம் செய்தல் வேண்டும் என்க.

முதலில் இப்பாட்டு பரயோகத்தைக் கூறுகின்றது.

சிவயோகி யார்களே:

சிவயோகத்தைப் பயிலும் சித்தர்கள்தாம் முதலில்,

வித்தைக் கெடுத்து:-

பிறவிக்குக் காரணமான விதை என்று சொல்லும் காரிய உபாதிப் பற்றுக்களை ஒழித்து,

ஒத்து புலன் உயிர்:

ஐம்புலஉணர்வு உலகப் பொருள்களில் செல்லாமல் உயிரிடத்தில் ஒன்றும்படி ஒத்து,

வியாக்கிரத்தே மிகச் சுத்தத் துரியம் பிறந்து துடக்கற ஒன்றாய்:-

பெரும்புலி என்று கூறும் பரதுரியத்திலே, தூய துரியம் பிறக்க, பற்றற்ற உயிரும் பரதுரியமும் ஒன்றாய் விளங்க,

உடம்பொடு செத்திட்டு இருப்பர்:

தாம் உடம்பொடு கூடியிருந்தும், உடம்பு உணர்வு சிறிதும் இல்லாமல், சீவனோடு கூடிய பரனையே நினைந்து,

இவ்விடத்தில்

"பரமாம் அதீதத்தைப் பற்றறப் பற்றுவார்கள்" (2274)

எனக் கூறும் திருமந்திரப் பாடற் கருத்தை நோக்குக.

விளக்கம்:

சிவயோகம் பயிலும் சித்தர் முன்னே தன்னை அறிந்து பரயோகம் பயிலவேண்டும் என்று மேலேக் கூறினோம். அப்பரயோகப் பயிற்சி பலநாள் நன்றாகச் செய்தால்தான்

உலகப் பற்று நீங்கும். அதன்பின்னர்தான் சிவயோகம் செய்யத்தக்கது. இக்கருத்தைக் கீழ்வரும் திருமந்திரப் பாட்டால் அறிக.

''பரமாம் அதீதமே பற்றறப் பற்றல்
பரமாம்; அதீதம் பயிலப் பயிலப்
பரமாம்; அதீதம் பயிலாத் தபோதனர்
பரமாகார் பாசமும் பற்றொன் றறாதே'' (2274)

வியாக்கிரம் என்கின்ற சொல் தத்பதப் பொருளாகிய பரனைக் குறிக்கும் என்பதைக் கீழ்வரும் திருமந்திரப் பாட்டால் உணர்க.

''துரியப் பரியில் இருந்த அச் சீவனைப்
பெரிய வியாக்கிரத் துள்ளே புகவிட்டு
நரிகளை ஓடத் துரத்திய நாதர்க்கு
உரிய வினைகள் நின்று ஓலமிட்டன்றே'' (2276)

இப்பாட்டின் பொருள்:

சீவதுரியம் என்னும் புரவியில் இருந்த அச்சீவனைப் பெரிய வியாக்கிரம் என்னும் தத்பதப் பரனில் புகுமாறு விட்டு, கன்மேந்திரியம், ஞானேந்திரியம், அந்தக்கரணம் என்னும் நரிகளை ஓடுமாறு துரத்திவிட்ட நாதாக்களுக்கு பிறவிக்கு உரிய நல்வினை தீவினை என்னும் வினைகள் எல்லாம் ஓலமிட்டு ஓடத்தொடங்கும் என்க.

இப்பாட்டால் வியாக்கிரம் என்ற சொல்லின் பொருள் விளக்கத்தை உணர்க.

பரயோகத்தின் பின் பயிலும் சிவயோகத்தை இப்பாட்டு கூறுகின்றது

10. ''சிவயோக மாவது சித்தசித்து என்று
தவயோகத் துள்புக்குத் தன்னொளி தானாய்
அவயோகம் சாராது அவன்பதி போக
நவயோகம் நந்தி நமக்களித் தானே,'' (122)

சிவயோகம் ஆவது:

பரயோகத்திற்குப் பின்செய்யும் சிவயோகம் ஆனது எது எனில்,

சித்து, அசித்து என்று தவயோகத்து உள்புக்கு:

சித்து என்னும் உயிரையும், அதனை இயக்கும் பரனையும், அசித்து என்னும் காரிய உபாதி ஏழினையும், காரண உபாதி ஏழினையும் ஆராய்ந்து உணரும் தவயோகத்தினுள் புகுந்து,

தன்னொளி தானாய் அவயோகம் சாராது:

உயிராகிய தன்னை உணரும் சீவதுரிய ஒளி தானாய் நின்று, பின்னர் பரதுரியத்தை ஆராய்ந்து அதனைப் பெறும் பேறு அவயோகம் ஆதலின் அதனைச் சாராதுவிட்டு,

அவன் பதிபோக:

ஒன்றுஅவன் என்னும் சிவன்பதி போதற்கு,

நந்தி நவயோகம் நமக்களித்தான்:

ஒன்பான் அவத்தை, ஒன்பான் அபிமானிகளால் ஆராய்ந்து சிவத்தைப் பெறுகின்ற நவயோகத்தை நந்தியாகிய குரு நமக்கு அளித்தான் என்க.

விளக்கம்:

ஒன்பான் அவத்தை ஒன்பான் அபிமானிகளைப் பற்றிய விளக்கம்:

சீவநனவு, சீவகனவு, சீவசுழுத்தி என்னும் மூன்று. அம் மூன்றால் சீவதுரியம் ஆராய்ந்து துணியப்படும். சீவநனவுக்கு விசுவன் அபிமானி. சீவகனவுக்கு தைசதன் அபிமானி. சீவ சுழுத்திக்குப் பிராக்ஞன் அபிமானி.

பரநனவு, பரகனவு, பரசுழுத்தி என்னும் மூன்றால் பரதுரியம் ஆராய்ந்து துணியப்படும். இதற்கு அபிமானி முறையே விராட்டன், பொன்கர்ப்பன், அவ்வியாகிருதன் என்க.

சிவநனவு, சிவகனவு, சிவசுழுத்தி என்னும் மூன்றால் சிவதுரியம் ஆராய்ந்து துணியப்படும். இதற்கு அபிமானி சித்சொலிதையன், பிரசாபத்தியன், பொற்புவிசாந்தன் என்க.

திருமந்திரத்துள் எட்டாம் தந்திரத்துள், முப்பத்து-இரண்டாவது பிரிவில் ''ஒன்பான் அவத்தை ஒன்பான் அபிமானி'' என்ற தலைப்பில் தொடங்கும்,

''தொற்பத விசுவன் தைசதன் பிராஞ்ஞன்
நற்பதூ விராட்டன் பொன் கர்ப்பன் அவ் யாகிர்தன்
பிற்பதஞ் சொலிதையன் பிரசா பத்தியன்
பொற்புவி சாந்தன் பொருதபி மானியே,'' (2537)

என்ந இப்பாட்டையும்,

''ஒன்பான் அவத்தையுள் ஒன்பான் அபிமானி
நன்பால் பயிலும் நவதத் துவமாதி
ஒன்பானில் நிற்பதோர் முத்துரி யத்துறச்
செம்பாற் சிவமாதல் சித்தாந்த சித்தியே'' (2545)

என முடியும் இப்பாட்டையும் அறிஞர் அறிக.

மேலே குறித்தவை நவயோகம் என்க. அந்த யோகம் ஒன்பது அவத்தை ஒன்பது அபிமானிகளைக் கொண்டு அறியப்படும். இந்தப் பதினெட்டையும் கடந்து சிவதுரியம் துணியப்படும். ஆதலின் திருமூலர் மற்றோர் இடத்தில் இதனைக் ''கணம் பதினெட்டும் கழலடி'' (2515) என்பர்.

இவற்றை எல்லாம் கருதாத உரையாசிரியர்கள் நவயோகம் என்பதற்கு ஏதேதோ எழுதுவர், நவயோக ஆராய்வே சிவயோகத்திற்கு அடி என்க. மாணிக்கவாசகரும்,

''அவமாய தேவர் அவகதியில் அழுந்தாமே
பவமாயங் காத்தென்னை ஆண்டுகொண்ட
பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாம் ஒழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ''
(திருத்தெள்ளேணம்-5)

என்பர். இப்பாட்டில் ''நவமாய செஞ்சுடர்'' என்பது ஒன்பது அவத்தைகளால் ஆராயப்பட்ட சீவதுரிய, பரதுரிய, சிவதுரிய செஞ்சுடர் என்க. இ:்து அறியாதார் 'புதிய செஞ்சுடர்' என்பர்.

நந்தியாகிய சிவபெருமான் அளித்தவை

11. ''அளித்தான் உலகெங்கும் தானான உண்மை
அளித்தான் அமரர் அறியா உலகம்
அளித்தான் திருமன்றுள் ஆடுந் திருத்தாள்
அளித்தான் பேரின்பத்து அருள்வெளி தானே''.(123)

உலகுஎங்கும் தான்ஆன உண்மை அளித்தான்:-

உலகம் முழுவதும் சிவனாகிய தான் வியாபித்து விளங்கு கின்ற உண்மைத் தத்துவத்தை, நாம் எல்லாம் கருதித் தியானிக்கும்படி உபதேசித்து அருளினான்.

இக்கருத்தை ஏகபாவனை என்னும் தலைப்பில்,

''பார்ஆதி எட்டும் அப்பாலும் எப்பாலுமாய்
ஓர்சோதியே நின்றது உந்தீபற
உன்னுவேறு இல்லை 'யென்று' உந்தீபற.

(அவிரோதவுந்தியார் – 73)

என்று அவிரோதவுந்தியார் கூறும்.

இதன் பொருள்:

நிலம் முதலான எட்டு வடிவங்களும், அவற்றிற்கு மேலாக உள்ளனவும், பின்னும் வாக்கு, மனத்திற்கு எட்டுவனவும், எட்டாதனவுமாய், விரிந்து நிற்பது ஒரு ஒளிப் பொருளே. வேறு ஒரு பொருளும் இல்லை'' என்று கருதி ஒருவர் ஏகபாவனை செய்ய வேண்டும் என்க.

இப்பாட்டின் உரையில் உரையாசிரியராகிய, திரு. சிதம்பர சுவாமிகள் இரண்டு திருமந்திரப் பாடல்களை உதாரணமாக எடுத்தாளுகின்றார்.

''தானே கடல்மலை ஆதியு மாய்நிற்கும்
தானே திசையொடு தேவரு மாய்நிற்கும்
தானே உடலுயிர் தத்துவமாய் நிற்கும்
தானே உலகில் தலைவனு மாமே''.

(திருமந்திரப் பதிப்பில் இப்பாடல் இல்லை)

''எங்கும் திருமேனி எங்கும் சிவசக்தி
எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம்
எங்கும் சிவமாய் இருத்தலால் எங்கெங்கும்
தங்கும் சிவன்அருள் தன்விளை யாட்டே''. (2722)

அமரர் அறியா உலகம் அளித்தான்:

தேவரும் அறியமாட்டாத உயர்ந்த வீடுபேறாகிய உலகத்தை எமக்கு அளித்தான். இக்கருத்தைத் திருக்குறள்,

''யான் எனது என்னும் செருக்கு அறுப்பான்
வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்''. (346)

என்று கூறும். இக்குறளில் வந்துள்ள **''வானோர்க்கு உயர்ந்த உலகம்''** என்பது அமரர் அறியா உலகம் என்க.

திருமன்றுள் ஆடும் திருத்தாள் அளித்தான்:–

அண்டத்தில் சிதாகாச வெளியாகிய மன்றத்திலும், பிண்ட மாகிய உடம்பில் உயிர்களின் நெஞ்சமாகிய மன்றத்திலும் நடிக்கும் தன்னுடைய திருத்தாள்களை எங்களுக்கு ஞான நடனத்தைக் கண்டதின் பேறாக அளித்தான்.

''அண்டத்துள் சிதாகாச வெளியில் நடிப்பான்'' என்பதை,

''பரமாண்டத் தோடே பரன்நட மாடுமே'' (2734)

என்பதனாலும்,

பிண்டமாகிய உடம்பில் அவன் ஆடுதலை,

''இருதயந் தன்னில் எழுந்த பிராணன்
கரசர ணாதி கலக்கும் படியே
அரதன மன்றினின் மாணிக்கக் கூத்தன்
குரவனாய் எங்கணும் கூத்துகந் தானே'' (2761)

என்பதனாலும் அறிக.

பேரின்பத்து அருள்வெளி தானே அளித்தான்:–

பெரிய இன்பத்தைத் தரும் திருவருள் வெளியை வீடு பேறாக அளித்தான்.

சிவசித்தரின் தெளிவினை இப்பாட்டு உணர்த்துகின்றது:

12. ''வெளியில் வெளிபோய் விரவிய வாறும்
அளியில் அளிபோய் அடங்கிய வாறும்
ஒளியில் ஒளிபோய் ஒடுங்கிய வாறும்
தெளியும் அவரே சிவசித்தர் தாமே'' (124)

வெளியில் வெளிபோய் விரவிய ஆறும்:-

உபசாந்தப் பெருவெளியில் உள்ள சிவத்தொடு, வியோம வெளியில் உள்ள பரன் கலப்பதையும்,

அளியில் அளிபோய் அடங்கிய ஆறும்:-

சிவனுடைய அநுக்கிரகம் என்கின்ற அருளில் ஆன்மாவின் பத்தி என்கின்ற அளி சென்று அடங்கிய விதத்தையும்,

ஒளியில் ஒளிபோய் ஒடுங்கிய வாறும்:-

சிவஒளியில், சீவவொளி, பரவொளி என்ற இரு ஒளிகளும் போய் அடங்கியவாறும்,

தெளியும் அவரே சிவசித்தர் தாமே:-

ஞான நூல்களைப் பெற்று, கற்று, சிந்தித்து, தெளிகின்ற அவர்களே சிவசித்தர்களாம்.

விளக்கம்:-

விரவுதல், அடங்குதல், ஒடுங்குதல் இவற்றின் பொருளை அறிஞர் கருதி உணர்க.

சிவசித்தரின் இயல்பை உணர்த்துகின்றது

13. ''சித்தர் சிவலோகம் இங்கே தெரிசித்தோர்
சத்தமும் சத்த முடிவும்தம் முள்கொண்டோர்
நித்தர் நிமலர் நிராமயர் நீள்பர
முத்தர்தம் முத்தி முதல்முப்பத் தாறே''. (125)

சித்தர் சிவலோகம் இங்கே தெரிசித்தோர்:-

ஞானசித்தி பெற்ற சித்தர் சிவன்வாழும் உலகம் என்னும் அசிபத ஆராய்ச்சியில் பரம் காட்சி என்னும் சிவ நனவையும், விசுவக்கிராசம் என்னும் சிவகனவையும், சிவசுழுத்தி என்னும் உபசாந்தத்தையும் இங்கே ஆராய்ந்து கண்டவர்,

சத்தமும் சத்தமுடிவும் தம்முள் கொண்டோர்:-

கடல்ஓசை, மேகத்தின்ஓசை, களிற்றின்ஓசை, வீணைஓசை புல்லாங்குழல்ஓசை, சங்கின்ஓசை என்னும் ஓசைகளைப் போல உள்ளே எழுகின்ற பலவித சத்தங்களையும் அச்சத்தங் களுக்கு முடிவான நாதாந்தம் என்னும் ஒன்றையும் தம்முள் ஆராய்ந்து உணர்ந்து கொண்டவர் என்க.

நித்தர்:-

அழியாதவர்

யோகநூல்கள் எல்லாம் சித்தர்கள் அழிவில்லாதவர்களாய் பிரம்மாண்ட வெளியில் சுற்றி வருவதாகக் கூறும் அதனால் நித்தர் என்றார்.

நிமலர்:-

நிர்மலர் என்ற சொல் நிமலர் எனத் திரிந்தது. இதற்கு மலம் அற்றவர் என்று பொருள்.

நிராமயர்,

ஆமயம் என்பது நோய். நோய் இல்லாதவர் நிராமயர் என்க. இச்சொல் அநாமயர் என்றும் வழங்கும்.

நீள்பரமுத்தர்:-

சீவன்முத்தரைக் காட்டிலும் உயர்ந்த மேலான முத்தர்.

தம் முத்தி முதல் முப்பத்தாறே:

தாம் அடையவேண்டிய சிவமுத்திக்கு அடியாக முதலில் ஆராய்ந்து உணர்வது முப்பத்தாறு சிவதத்துவங்கள் என்க,

முப்பத்தாறு தத்துவங்களையும் தனித்தனி ஆராய்ந்து தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி என மூன்று வகைகளில் உணர்வது முதல்நிலை ஆதலின் முதல் முப்பத்தாறே என்று கூறினார்.

திருமூலர் கருதும் தத்துவங்கள்:

''ஆகின்ற தொண்ணூறோடு ஆறும் பொதுஎன்பர்
ஆகின்ற ஆறாறு அருஞ்சைவர் தத்துவம்
ஆகின்ற நாலேழ் வேதாந்தி வைணவர்க்கு
ஆகின்ற நாலாறு; ஐயைந்துமாயா வாதிக்கே''
(2179)

இப்பாடலின் பொருள்:-

தொண்ணூற்றாறு தத்துவங்கள் எல்லார்க்கும் பொதுவானதாகும். சிறப்புத் தத்துவங்களைக் கூறுங்கால் சைவர்க்கு முப்பத்தாறு, வேதாந்திக்கு இருபத்தெட்டு, வைணவர்க்கு இருபத்துநான்கு, மாயாவாதிக்கு இருபத்தைந்து என்பனவாகும்.

திருமூலர் சிவனைப் போற்றுவதால் சைவராவர். தத்துவமசி என்னும் வேதாந்த வாக்கியத்தை எடுத்தாளுவதால் வேதாந்தியும் ஆவர். அதனால் திருமூலர் தம் நூலில் சைவதத்துவ மாகிய முப்பத்தாறையும், வேதாந்த தத்துவமாகிய இருபத் தெட்டையும் எடுத்தாளுகின்றார். அவர் தம் நூலுள் "நாலேழ்" (2176) என்று வழங்குவது இருபத்தெட்டு தத்துவத்தை. இச்சொல்லுக்குப் பொருளறியாதவர் உம்மைத் தொகையாகக் கொண்டு பதினொன்று எனப்பொருள் கூறி இடர்ப்படுவர்.

இந்த நால்ஏழும் இன்னதென்பதைத் திருமூலர்,

"பத்தொடு பத்துமோர் மூன்றும் பகுதியும்
உய்த்த துரியமும் உள்ளுணர் காலமும்
மெய்த்த வியோமமும் மேலைத் துரியமும்
தத்துவ நாலேழ் எனவுன்னத் தக்கதே" (2176)

என்று கூறி விளக்குகின்றார்.

ஆகவே அவர் கொண்ட இரண்டில் இவ்வுபதேசப் பகுதியில் கூறுவது முப்பத்தாறு சிவ தத்துவங்களாகும். முப்பத்தாறு தத்துவங்கள் எவை எனில், நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களும், செவி, உடம்பு, விழி. நா, மூக்கு, என்னும் ஐந்து ஞானேந்திரியங்களும் இவ்வைந் திற்கும் புலன்களான ஒலி, ஊறு, உருவம், சுவை, நாற்றம் என்னும் ஐந்தும், வாய், கால்கள், கைகள், மலங்கழி உறுப்பு, குறி என்னும் தொழிற்கருவிகள் ஐந்தும், சித்தமும், புத்தியும் அகங்காரமும், மனமும் என்று அந்தக்கரணங்கள் நான்கும், கலையும், காலமும், நியதியும், வித்தையும், அராகமும், புருடனும், மாயையும் என்னும் வித்யாதத்துவங்கள் ஏழும், அவற்றிற்கு மேலாகிய சுத்த வித்தையும், மாகேசமும், சாதாக்கியமும், சத்தியும், சிவமும் என்ற சிவதத்துவம் ஐந்தும் ஆக முப்பத்தா றாகும்.

இந்த முப்பத்தாறில் நிலம் முதல் சித்தம் ஈறாக உள்ள இருபத்து நான்கும், ஆன்மதத்துவங்கள் என்றும், கலை முதல் மாயை ஈறாக உள்ள ஏழும் வித்யாதத்துவங்கள் என்றும், சுத்த வித்தை முதலாக சிவம் ஈறாக உள்ள ஐந்தும் சிவதத்துவம் என்றும் முக்கூறாக வழங்கும்.

சிவசித்தர் அமர்ந்திருந்த நிலை:

14. "முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்
ஒப்பிலா ஆனந்தத் துள்ளொளி புக்குச்
செப்ப அரிய சிவங்கண்டு, [1]தாம்தெளிந்து
அப்பரி சாக அமர்ந்திருந் தாரே" (126)

பாட விளக்கம்:

"அமர்ந்திருந்தாரே" என்ற பன்மையால் தாம் தெளிந்து எனப் பாடங் கொள்ளவேண்டும். தான் தெளிந்து என்பது பிழையான பாடமாகும். தாம் என்ற பொதுப்பெயரை இப் பாட்டிற்கு எழுவாயாகக் கொள்க.

தாம் முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்:

சிவசித்தர்தாம் சிவாகமங்கள் கூறும் முப்பத்தாறு சிவ தத்துவங்களையும் முத்தியை அடைவதற்கு படியமைந்த ஏணி யாகக் கொண்டு, ஒவ்வொன்றையும் ஆராய்ந்து, இவை மெய்ப் பொருள் அல்ல எனத்தெளிந்து அவற்றைக் கடந்து ஏறி,

ஒப்புஇலா ஆனந்தத்து உள்ளொளி புக்கு:

உவமையில்லாத ஆனந்தத்தைத் தரும், சீவதுரிய ஒளி, பர ஒளியாகிய உள்ளொளியின்கண் புகுந்து,

செப்புஅரிய சிவங்கண்டு:

அந்த உள்ளொளியின் உதவியால் சொல்லுதற்கு அரிய சிவ ஒளியைக் கண்டு.

தெளிந்து:

கண்டதோடு அல்லாமல் நன்றாகத் தேறி, தெளிந்து,

அப்பரிசாக அமர்ந்திருந்தார்:-

சிவ ஒளியைக் கண்டு, தேறி, தெளிந்த அந்த நிலையிலேயே தங்கி மௌன சமாதி நிலையில் இருந்தார் என்க.

விளக்கம்:-

அப்பரிசாக இருந்தார் என்றதினால் முப்பத்தாறு தத்துவ நிலைக்குச் செல்லாமல், ஒப்பிலா ஆனந்தத்து உள்ளொளி நிலையில் நில்லாமல் சிவஒளியையே உணர்ந்திருந்தார் என்க.

இங்கு, சித்தாந்த சாத்திரத்துள், ''சீர்காழி தத்துவநாதர் அருளிச் செய்த பாடல் ஒன்றைக் கருதி உணர்க. அப்பாட்டு தசகாரியப் பகுதியில் சிவதரிசனம் என்ற தலைப்பில் வருகின்றது

''தரைமுதலில் போகாது [1]தன்நிலைநில் லாது
[2]தற்பரையில் அழுந்தாது அற்புதத்தின் ஆகும்
தெரிவரிய பரமானந் தத்தில் சேர்தல்
சிவன் உண்மைத் தெரிசனமாய்ச் செப்பும்
நூலே'' (4)

சிவதரிசனம் செய்வோர் நிலம் முதலாக சிவம் ஈறாகிய முப்பத்தாறு தத்துவங்களில் போகாது, அதன்பின் ஆன்மாவாகிய தன்னிலையிலே நில்லாது, அதன்பின் ஆன்மாவுடன் நின்று ஆன்மாவை இயக்கும், பரனாகிய உள்ளொளியிலே நில்லாது. இவற்றையெல்லாம் கடந்து அறிதற்கரிய சிவானந்த நிலை சேர்தலே சிவதரிசனம் ஆகும்.

இப்பாட்டின்படி ''தரைமுதலில் போகாது'' என்பது முப்பத்தாறு தத்துவங்களைக் கடந்தது. தற்பரையில் அழுந்தாது என்பது, ''ஒப்பிலா ஆனந்தத்து உள்ளொளி புக்கு'' என்பதைக் குறிக்கும்.

ஆக ''முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்'' என்ற இப் பாட்டு தசகாரியத்துள் சிவதரிசனத்திற்கு எடுத்துக்காட்டாய் அமைகின்றது.

குறிப்பு:- இப்பாட்டின் பாடபேதத்தை மூலப்பதிப்பில் காண்க

இப்பாட்டு சிவம்கண்டு தெளிந்த சித்தர் இருந்த படியைக் கூறுகின்றது

15. ''இருந்தார் சிவமாகி எங்கும் தாமாகி
இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி
இருந்தார் முக்காலத் தியல்பைக் குறித்தங்கு
இருந்தார் இழவுவந்து எய்திய சோம்பே'' (127)

(சித்தர்) சிவமாகி எங்கும் தாமாகி இருந்தார்:-

சிவத்தைத் தெளிந்த சித்தர் பின் அந்தச் சிவமே தாமாகப் பாவனை செய்து, அதனால் எங்கும் தாமாக விளங்கும் வியாபக நிலையைப் பெற்றிருந்தார். இக்கருத்தை,

''எங்குமாய் முத்தியில் ஈசனோடு எய்தலால்
மங்கா உயிர்விபு உந்தீபற
மற்றைய கூறொணாது உந்தீபற'' (58)

என்னும் அவிரோத உந்தியார் பாடலால் உணர்ந்து கொள்க.

ஆன்மா ஆணவத்தோடு கூடியதென்றும், அதனால் அது தன்வியாபகத் தன்மையை இழந்து அணுத்தன்மையைப்

பெற்றுவிட்டது என்றும், அணுத்தன்மையைப் பெற்ற அந்நிலை வியாபகப் பொருளாகிய சிவத்தைக் கண்டு, தெளிந்து அதுவாய் நின்ற பொழுது வியாபகத் தன்மையைப் பெற்றுக் கொண்ட தென்றும் கூறுவர்.

எனவேதான் ‘‘சிவமாகி, எங்கும் தாமாகி’’ என்று கூறினார்.

ஆன்மா பந்தநிலையில் அணுத்தன்மையைப் பெற்றது. அது முத்திநிலையில் விபுத்தன்மையையும் பெற்றது.

சிவன் செயல் யாவையும் நோக்கி இருந்தார்:-

எங்கும் தாமாகி வியாபக நிலையைப் பெற்ற சித்தர். சிவனுக்குள்ள செயல்களை மேற்கொண்டு தாம் செய்யாமல் சிவன் செயலையே நோக்கி இருந்தார்.

முக்காலத்து இயல்பைக் குறித்து அங்கிருந்தார்:-

அச்சித்தர் (மூன்று காலங்களிலும்) இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூன்று காலங்களிலும் மாறாமல் ஒரே செயலையே கருதி வாழ்ந்தார்.

இக்கருத்தை, தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத் திணையில் வாகைத் திணையில்

‘‘மறுவில் செய்தி மூவகைக்காலமும்
நெறியில் ஆற்றிய அறிவன் தேயமும் (75)

என்று கூறும்.

குற்றமில்லாமல் ஆராய்ந்து கண்ட ஒன்றை மூன்று காலத்திலும் பிறழாமல் கொண்டிருப்பது அறிவோர் செயல்.

இழிவு வந்து எய்திய சோம்பே இருந்தார்:-

சிவத்தைக் கண்டு தெளிந்து, சிவமாகி எங்கும் தாமாகி இருந்த இவர் உலகியல் காரியங்களில் எதையும் செய்யாமல் விட்டு, அச்செயலைச் செய்யாத சோம்பராக இருந்து விட்டார்கள்.

உலகியற் செயல்களை விட்ட சித்தராகிய சோம்பர்களின் இருப்பு முதலானவை

16. ''சோம்பர் இருப்பது சுத்த வெளியிலே
சோம்பர் கிடப்பதும் சுத்த வெளியிலே
சோம்பர் உணர்வு சுருதி முடிந்திடம்
சோம்பர்கண் டாரச் சுருதிக்கண்
தூக்கமே'' (128)

சோம்பர் இருப்பது சுத்தவெளியிலே:-

சிவத்தைக் கண்டு, தெளிந்து அதுவாகி எங்கும் தாமாய் இருந்து உலகியல் செயல்களை விட்ட சித்தர்களின் மோன சமாதியின் உணர்வு, விரிவு குவிவு அற்ற பரவெளியிலே இருக்கும்.

சோம்பர் கிடப்பதும் சுத்த வெளியிலே:-

சோம்பர் கிடந்து உறங்கும் நிலையிலும் அந்தச் சுத்த வெளியிலே கனா கண்டு கொண்டிருப்பர்.

சோம்பர் உணர்வு சுருதி முடிந்த இடம்:-

சோம்பராகிய சித்தரின் அறிவு என்னும் உணர்வெல்லாம் வேதாந்த வாக்கியமாகிய தத்துவமசியின் முடிந்த சொல்லாகிய அசிபத சிவத்தில் அமைந்திருக்கும் என்க. அவ்அசிபதச் சிவம் அனந்த தன்மையும், ஆனந்த தன்மையும் பெற்றது என்க. அனந்தம் எல்லை இல்லாதது.

அசிபதத்தில் அனந்த நிலையைப் பெற்றவர்களை அனந்த பராயணர் என்றும், ஆனந்த நிலையைப் பெற்றவர்களை ஆனந்த பராயணர் என்றும் அறிஞர் வழங்குவர்.

சோம்பர் அச்சுருதிக்கண் தூக்கமே கண்டார்:-

அச்சித்தர் மகாவாக்கியமாகிய சுருதியை நன்கு ஆராய்ந்து, அதிலே தெளிந்து, வேறு ஒரு பொருளையும் கருதாது மடங்கியிருக்கும் தூக்க நிலையைக் கொண்டவராவர்.

தூக்கம் என்பது கருதியபொருளையே பற்றி, வேறு ஒன்றில் உணர்வு செல்லாமல் மடங்கியிருக்கும் நிலை. அது சிவயோக சமாதி என்க.

சோம்பர் – செயல் அற்று மௌனசமாதியில் இருப்போர் எனக.

தூக்கநிலை - சமாதி நிலை

சுருதிக்கண் தூக்கம்கண்ட அச்சித்தர்
அச்சுருதிக்கண் ஆராய்ந்து
தெளிந்தவை:

17. ''தூங்கிக்கண் டார்சிவ லோகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்சிவ யோகமும் தம்உள்ளே
தூங்கிகக்கண் டார்சிவ போகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்நிலை சொல்வதெவ் வாறே''
(129)

தூங்கி சிவலோகமும் தம்உள்ளே கண்டார்:

(வேதாந்த மகாவாக்கியமாகிய சுருதியை ஆராயத் தொடங்கிய அச்சித்தர்) அச்சுருதிக்கண் உள்ளம் ஒன்றி ஆராயத் தொடங்கி அச்சுருதியாகிய மகாவாக்கியத்துள்

துவம்பதப் பொருளாகிய சீவதுரியத்துள் சிவன் உறைவதையும், தத்பதப்பொருளாகிய பரதுரியத்துள் சிவன் உறைவதையும் அசிபதத்தில் அகண்டமாகச் சிவன் உறைவதையும், ஆராய்ந்து தம் உணர்வில் கண்டார்.

இங்கே சிவலோகம் என்பது துவம்பத, தத்பத, அசிபதத்தை. அதனுள் சிவன் உறைவதால் அவை சிவலோகம் ஆயின.

தூங்கி சிவயோகமும் தம்முள்ளே கண்டார்:

உணர்வு ஒன்றி ஆராயத் தொடங்கி, துவம்பதச் சீவனில் உள்ளுறையாக உள்ள சிவத்தையும், தத்பதப் பரனில் உள்ளுறையாக உள்ள சிவத்தையும், அசிபத அகண்ட சிவத்தோடு ஒன்றுபடுத்தும் யோக நிலையையும் கண்டார்.

யோகம்–ஒன்றுபடுத்துதல்

தூங்கி சிவபோகமும் தம் உள்ளே கண்டார்:

ஒன்றுபட்டு ஆராயத் தொடங்கி, சீவதுரியச் சிவன், பால் போலவும், தத்பதச்சிவன் தேன் போலவும், அசிபதச்சிவன் அமுதம் போலவும் இனிப்பைத் தருகின்ற போக அநுபவத்தையும் தம்முள்ளே அச்சித்தர் கண்டார்.

தூங்கிக் கண்டார் நிலை சொல்வது எவ்வாறே:

ஒன்றுபட்டு உணரத் தொடங்கி மேலே கூறியபடி சிவலோகத்தையும், சிவயோகத்தையும் சிவபோகத்தையும் தம் முள்ளே ஆராய்ந்து உணர்ந்து கண்டவராகிய அச்சித்தரின் நிலையை நாம் சொல்வது எவ்வாறு? சொல்லமுடியாது என்க.

விளக்கம்:

''சிவனைப் பரனுள் சீவனுள் காட்டும்
அவமற்ற வேதாந்த சித்தாந்த மானான்'' (2395)

என்ற இப்பாட்டின்படி துவம்பத தத்பத சீவனுள்ளும், பரனுள்ளும் சிவன் உறைதலைக் காணலாம். அதனலே துவம்பதமும் தத்பதமும் கண்ட சிவன் உறையும் சிவலோகமாயின்.

அசிபதம் முற்றிலும் சிவத்தைக் கருதியதால் அகண்ட சிவன் உறையும் சிவலோகமாயிற்று.

''அணுவும் பரமும் அசிபதத் தேய்ந்து
கணுவொன் றிலாத சிவமும் கலந்தால்'' (2440)

என்னும் இவ்வரிகள் சிவயோகத்திற்கு மேற்கோள் ஆகும்.

''இணையறு பால்தான் அமுதென இன்பத்து
உணையது வாய்உரை அற்றிடத்து ஒன்றுமே''
(2440)

என்னும் திருமந்திரப் பாடலின் பகுதி சிவபோகத்திற்கு மேற்கோள் ஆகும்.

முப்பதச்சிவமும் கலந்து ஒன்றிய நிலையானது பாலும், தேனும், அமுதமும் ஒன்றாய்க் கலந்து இன்பத்தைத் தரும் நிலைக்கு ஒத்தலின் இப்பாடல் வரிகள் சிவபோகத்திற்கு மேற்கோள் ஆயிற்று.

''உணையது வாய்'' என்பது உள் இன்பத்தால் நையும் இன்ப அநுபவத்தைப் பெற்று என்று உரை கொள்ள வேண்டும்.

உள் + நை + அதுவாய் என்ற சொல் உணையதுவாய் என்று புணர்ந்தது.

தத்பதம் முதலானவற்றுள் சிவன் கலந்துள்ள செய்தியை,

''தற்பதம் என்றும் துவம்பதந் தானென்றும்
நிற்பது அசியத்துள் நேரிழை யாள்பதஞ்
சொற்பதத் தாலும் தொடரவொண் ணாச்சிவன்
கற்பனை யின்றிக் கலந்துநின் றானே. (2439)

என்ற இப்பாடலாலும் அறிக.

இப்பாட்டு ஆதி, அரனுடைய தன்மை கூறும், அவன் மன்றுள் நடிப்பதும் ஆகிய இரண்டைக் கூறுகின்றது:

18. **''எவ்வாறு காண்பான் அறிவு தனக்கெல்லை**
அவ்வாறு அருள்செய்வான் ஆதி அரன்தானும்
ஒவ்வாத மன்றுள் உமைகாண ஆடிடும்
செவ்வானில் செய்ய செழுஞ்சுடர் மாணிக்கம்''
(130)

அறிவு தனக்கு எல்லையாகிய ஆதி அரன் தானும் எவ்வாறு காண்பான் அவ்வாறு அருள் செய்வான்:

அறிவுப் பொருள்களுக்கெல்லாம் தான் எல்லையாய் இருக்கும் முதன்மையாகிய சிவன்தானும் (ஒருவர்) எந்தஎந்த உணர்வால் உணர்கின்றார்களோ அவர்கள் கருதிய அந்த அந்த உணர்வுக்குரிய வடிவம் கொண்டு அவர்களுக்கு அருள் செய்வான் என்க.

விளக்கம்:

ஒருவர் இறைவனை உருவப் பொருளாகக் கருதினால் உருவத்திலிருந்தும், அருவப் பொருளாகக் கருதினால் அருவத்திலிருந்தும், அறிவுப் பொருளாகக் கருதினால் அறிவிலிருந்தும் ஆதிஅரன் அருள் செய்வான் என்க.

அச்சிவன் சிற்றறிவுப் பொருளாகிய சீவனுக்கும், ''விகிர்த பாவ அறிவுடைய'' பரனுக்கும், மேற்பட்டு அறிவுக்கு எல்லை யாக இருத்தலின் ''ஆதி அரனே அறிவு தனக்கு எல்லை'' என்று கூறினார்.

செவ்வானில் செய்ய செழுஞ்சுடர் மாணிக்கம் ஒவ்வாத மன்றுள் உமைகாண ஆடிடும்:

சிவந்த வானத்தைக் காட்டிலும், (செக்கர்வான்) சிவப்பு நிறத்தைப் பெற்றிருக்கும் நல்ல ஒளிபடைத்த மாணிக்கம் போன்ற சிவபெருமான், அண்டங்கள் ஏழினுக்கு அப்பாலே உள்ள சதானந்த சத்தி, அதற்கு மேல் உள்ள சதாசிவம், அச்சதாசிவத்தினது உச்சி என்கின்ற ஈசானமன்றத்தின் மேல் இருந்து உமாதேவியார் காண நடனம் செய்வான் என்க.

ஒவ்வாத மன்று – உவமையில்லாத மன்று.

சதாசிவத்தினது உச்சி என்கின்ற ஈசான மன்று. ''உவமை இல்லாத மன்றாகையால்'' ஒவ்வாத மன்று என்று கூறினார்.

மேற்கோள்:

இறைவன் சதானந்த சத்திமேல் நடிப்பான் என்பதை,

''தானந்தம் இல்லாச் சதானந்த சத்திமேல்
தேனுந்தும் ஆனந்த மாநடங் கண்டீர்
ஞானங் கடந்து நடஞ்செய்யும் நம்பிக்கங்கு
ஆனந்தக் கூத்தாட ஆடரங் கானதே'' (2724)

என்ற பாடலால் அறியலாம்.

சதாசிவத்து உச்சிமேல் உமைகாண இறைவன் ஆடுவான் என்பதை,

''அண்டங்கள் ஏழினுக்கு அப்புறத் தப்பான்
உண்டென்ற சத்தி சதாசிவத் துச்சிமேல்
கண்டய் கரியான் கருணை திருவுருக்
கொண்டங்கு உமைகாணக் கூத்துகந் தானே'' (2732)

என்ற பாடலால் அறியலாம்.

மாணிக்ககக் கூத்தன் நடனக் காட்சி

19. ''மாணிக்கத் துள்ளே மரகதச் சோதியாய்
மாணிக்கத் துள்ளே மரகத மாடமாய்
ஆணிப்பொன் மன்றினில் ஆடும திருக்கூத்தைப்
பேணித் தொழுதென்ன பேறுபெற றாரே'' (131)

மாணிக்கத்துள்ளே மரகதச் சோதியாய் மாணிக்கத்துள்ளே மரகத மாடமாய் ஆணிப்பொன் மன்றினில் ஆடும் திருக்கூத்தை.

மாற்றுக் குறையாத பசும்பொன் போன்ற **ஈசானம்** என்கின்ற மன்றிலே, தன் சத்தியாகிய உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு, அதனால் மாணிக்கச் சோதியிலே ஒருபால் மரகதச் சோதி விளங்கவும், மாணிக்க மாடத்துள்ளே ஒருபால் மரகத மாடம் விளங்கவும் ஆடும் திருக்கூத்து என்க.

பேணித் தொழுது என்ன பேறு பெற்றாரே:

இவ்வாறு இறைவன் ஆடும் திருக்கூத்தை, அறிவால் கண்டு பேணித் தொழுது, தொழுதவர் எத்தகைய பேற்றினைப் பெற்றார்? சிறந்த பேற்றினைப் பெற்றார் என்க.

இத்திருநடக் காட்சியை மாணிக்கவாசகர் கண்ட பத்தில் கூறுவதை அறிஞர் அறிக.

''பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமில்லாப்
பெருமையனைனக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை
கண்டேனே'' (10)

இப்பாட்டில் கிளரொளியை என்றது மாணிக்கச் சோதியை; மரகதத்தை என்றது மரகதச்சோதியை.

இறைவன் செய்யும் அருள் நடனத்தைக் காணப் பெற்றார் அடையும் பயன்கள்

20. **''பெற்றார் உலகில் பிரியாப் பெருநெறி**
பெற்றார் உலகில் பிறவாப் பெரும்பயன்
பெற்றார் அம்மன்றில் பிரியாப் பெரும்பேறு
பெற்றார் உலகுடன் பேசாப் பெருமையே''
(132)

உலகில் பிரியாப் பெருநெறி பெற்றார்:

(மன்றில் ஆடும் திருக்கூத்தைத் தொழுதவர்கள்)

உயர்ந்த உலக மக்களிடத்திலே பயிலப்பட்டு, நீங்காமல் இருக்கின்ற பெரிய நெறியான பிரணவசமாதி நெறியை நன்கு அடையப் பெற்றவர் ஆவர்.

''பெருநெறியான பிரணவம் ஓர்ந்து'' (227) என்னும் திருமந்திரத்தால் பெருநெறியை இன்னது என்று உணர்க.

பிரணவசமாதிநெறியை ஒன்பதாம் தந்திரத்துள் ''பிரணவ சமாதி'' என்ற தலைப்பில் காண்க.

உலகில் பிறவாப் பெரும்பயன் பெற்றார்:

(திருக்கூத்தைத் தொழுதவர்) இந்த உலகத்திலே பிறந்து இறக்கின்ற தீய நெறியைப் பெறாத பெரும்பயனைப் பெற்றார்.

அம்மன்றில் பிரியாப் பெரும்பேறு பெற்றார்:

(அவர்) இறைவன் நடனம் செய்கின்ற சத்தி மன்றத்தை விட்டு, பிரியாது அங்கே வாழந்திருக்கின்ற சிறந்த பேற்றினைப் பெற்றவராவர்.

உலகுடன் பேசாப் பெருமையே பெற்றார்:

(அவர்) உலகமக்களுடன் பேசாமல் இருந்து மௌன சமாதியில் இருக்கும் நிலையைப் பெற்றார்.

எம்பிரான்போல் சித்திகளைப் பெற்றவர் ஐம்புலனை அடக்கி இருமைப் பயனையும் கேட்டிருப்பர்,

21. ''பெருமை சிறுமை அறிந்துஎம் பிரான்போல்
அருமை எளிமை அறிந்துஅறி வாரார்
ஒருமையுள் ஆமைபோல் உள்ளைந் தடக்கி
இருமையும் கேட்டிருந் தார்புரை அற்றே.'' (133)

எம்பிரான் போல் பெருமை சிறுமை அறிந்து அருமை எளிமை அறிந்து அறிவார் ஆர்:

இறைவன் அட்டமாசித்தியுள் மகிமா என்கின்ற பெருமையையும் அணிமா என்கின்ற சிறுமையையும் வசித்துவத்துள் அரியவனாய் இருத்தல் என்கின்ற அருமையையும், எளியவனாய் இருத்தல் என்கின்ற எளிமையையும் ஆகிய இவற்றை என்பிரானைப்போல் அறிந்து, அவ் இறைவன் பெருமையை **அறிபவர் யார்?**

உள்ஐந்தை ஒருமையுள் ஆமையைப் போல அடக்கி:

உள்ளே உள்ள ஐம்புல அறிவை ஐந்து வகையாகப் பிரிந்து செல்லாமல் ஆமையைப் போல ஒருமைப்படும்படி அடக்கி,

புரை அற்று இருமையும் கேட்டிருந்தார்:

(அவ்வாறு பயின்ற அறிஞர்) குற்றம் அற்று இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் அறிஞரிடத்திலே கேட்டிருந்தார்.

குறிப்பு:

இருமை என்னும் சொல்லின் பொருளை "இருமை என்பது இம்மையும் மறுமையும்" (பிங்கலநிகண்டு – பக் – 60) என்ற பிங்கல நிகண்டால் அறிக.

எளிமை என்பதை வடமொழியாளர் சௌலப்யம் என்பர் அது அடியார்க்கு எளியவனாதல் என்க.

ஆசிரியன் செப்புவதும் அவர் செப்பியதைச் சிந்தித்து மௌனசமாதியில் இருப்பவர்தம் பேறும்

22. "புரை அற்ற பாலினுள் நெற்கலந் தாற்போல்
திரைஅற்ற சிந்தைநல் ஆரியன் செப்பும்
உரையற்று உணர்வோர் உடம்பிங்கு ஒழிந்தாற்
கரையற்ற சோதி கலந்தசத் தாமே" (134)

புரைஅற்ற பாலினுள் நெய் கலந்தாற்போல்:

குற்றமற்ற நல்ல பாலினுள் நெய் உள்ளீடாய்த் தனித்திராமல் கலந்திருத்தலைப் போல ஆன்மாவினுள் இறைவன் கலந் திருப்பான் என்ற உண்மையை,

''உவமப் பொருளின் உற்றது உணரும்
தெளிமருங்கு உளவே! திறத்தியலான''
(தொல்காப்பியம், உவமையியல் 20)

என்னும் நூற்பாவின்படி அறிந்துகொள்ளப்பட்டது.

நல் ஆரியன் திரையற்ற சிந்தையுள் செப்பும்:

நல்ல ஆசிரியனானவன் யான் எனது என்பதுஅற்ற விருப்பு, வெறுப்பு அற்ற மாணவனுடைய சிந்தைக்கண் மேற் கண்ட செய்தியைத் தெளிவாகக் கூறுவன்.

உரை அற்று உணர்வார்:

(பாலினுள் நெய்போல, ஆன்மாவினுள் இறைவன் உள்ளீடாய் உறைவன் என்ற செய்தியை உணர்ந்த அறிஞர்) மௌன சமாதியுள் இருந்து அவ் இறைவன் உண்மையை உணர்ந்திருப்பர்.

உரையற்று என்பது மௌன சமாதியே.

உணர்வோர் உடம்பிங்கு ஒழிந்தால் கரை அற்ற சோதி கலந்த சத்தாமே:

மௌன சமாதியில் இருக்கும் அறிஞருடைய உடம்பு, காலப் பழமையால் பழுதுபட்டு இங்கே அழிந்துபோனால் அவ்வுடம்பினுள் வாழும் அறிவுப் பொருளாகிய ஆன்மா எல்லை யற்ற பேரறிவுப் பொருளில் கலந்துவிட்ட சத்துப் பொருளாக இருக்கும்.

விளக்கம்:

உடம்பு இங்கு ஒழிந்தால் என்பதற்கு ஒருவருடைய தூலஉடம்பும் சூக்கும உடம்பும், காரண உடம்பும் என்னும் மூன்றுவகை உடம்புகளும் ஒழிந்தால் என்று பொருள் கொள்ள வேண்டும்.

''உடைந்திட உறுகடம் உள்ளி ருந்தொளி
விடுஞ்சுடர் எங்கணும் விளங்கு மாறுபோல்
நெடுந்தகைப் பெறுமுடல் நீங்க எங்கும் எவ்
இடங்களும் ஒளிரும் ஆன் மாநின் றென்பவே''
(சதமணி மாலை–97)

என்ற சதமணிப்பாடலையும்,

''கடமெனும் உபாதி போனால்
ககனமொன்று ஆனாற் போல
உடலெனும் உபாதி போன
உத்தரஞ் சீவன் முத்தர்
அடிமுடி நடுவு மின்றி
யகம்புற மின்றி நின்ற
படிதிகழ் விதேக முத்திப்
பதமடைந் திருப்ப ரென்றும்.
(கைவல்லிய நவநீதம், தத்துவ விளக்கப் படலம்–106)

என்ற கைவல்லிய நவநீதப் பாடலையும் மேற்கண்ட பாடலோடு ஒப்புநோக்குக.

தன் மாத்திரைகள் மாயையில் அடங்கு
மானால் அதனுள் குடிகொண்டிருக்கும்
சித்தாய் பொருளாகிய ஆன்மா
மாயையில் அடங்காது சிவத்துள்
அடங்கும் என்பதைத் தெரிவிக்கிறது

23. ''சத்தம் முதல் ஐந்தும் தன்வழித் தான் சாரில்
சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ
சுத்த வெளியில் சுடரில் சுடர்சேரும்
அத்தம் இதுகுறித்து ஆண்டுகொள்
அப்பிலே.'' (135)

சத்தம் முதல் ஐந்தும் தன்வழித் தான்சாரில் சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ:

(பல தத்துவங்களுக்குக் காரணமான சூக்கும பூதங்களாகிய தன் மாத்திரைகள் என்னும்) சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் ஐந்தும் தனக்கு முதலாகிய காரணப்பொருளில் அடங்கிவிடுமேயானால், அவை அவ்வியக்தம் என்கின்ற மாயை என்னும் காரணப்பொருளாக ஆகி நிற்கும். ஆனால் அதனுள் வாழ்ந்திருந்த ஆன்மாவாகிய அறிவுப் பொருள் அம்மாயையில் அடங்காது. அவ்ஆன்மா சித்துப்பொருளாகிய சிவசித்திலேயே அடங்கி நிற்கும். வேறு இடங்களில் அடங்காது.

விளக்கம்:

சத்தம் முதலான தன்மாத்திரைகள் தமோ குணத்தில் தோன்றிய விட்சேபசத்தியின் காரியமாகும்.

இவை காரணமாய் இருந்து அந்தக்கரணங்கள், ஞானேந்திரியங்கள், கன்மேந்திரியங்கள், நிலம் முதலான ஐம்பூதங்கள், தனுகரணபுவன போகங்கள் என்னும் இவைகளை எல்லாம் உண்டாக்கும்.

இவற்றை அபவாத உத்தியால் காரியப் பொருள்களை எல்லாம் காரணங்களில் அடைக்கின், சூக்கும தன் மாத்திரை களாகவும், விட்சேப சத்தியாகவும் தமோகுணமாகவும், முடிவில் மாயையாகவும் அடங்கிவிடும் என்க.

இவ்வாறு அடங்கவே ஞானேந்திரியம் முதலானவற்றுள் வாழும் சித்துப்பொருளாகிய ஆன்மா எதில் அடங்கும் என்று வினாவில் அது சித்துப்பொருள் ஆகையினால் மாயையில் அடங்காது. எனவே சித்துப் பொருளாகிய சிவத்திலேயே முடிவில் அடங்கிவிடும் என்க.

இக்கருத்தைக் கருதி "சத்த முதல் ஐந்தும் தன்வழித் தான்சாரில் சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ" என்று கூறினார் என்க.

சுத்த வெளியில் சுடரில் சுடர்சேரும்:

விரிதல் குவிதல் என்னும் இரண்டுமில்லாத பரவெளிக்கண் வாழும், பேரொளிப் பொருளாகிய சிவம் என்னும் சுடரில் ஆன்மாவாகிய சுடர் சென்று அடங்கும் என்க.

அத்தம் இதுகுறித்து ஆண்டுகொள் அப்பிலே:–

மேலே சொன்ன செயற்பாடுகளின் பொருளைக் கருதி (இறைவன்) தன் திருவருளாகிய அப்பின்கண் ஆண்டு கொள்வன் என்க.

விளக்கம்:

அப்பு என்பது நீரினைக் குறித்தது. அது அந்நீர் போலக் குளிர்ந்த திருஅருளைக் குறித்தது. கொள் என்கின்ற முதல் நிலைத் தொழிற்பெயர் கொள்வான் என்கின்ற முற்றுப் பொருளில் வந்துள்ளது.

இவ்வாறன்றி அத்தம் என்பதை அத்தன் என்று பாடங் கொண்டு, அத்தனாகிய இறைவன் இதுகுறித்து அப்பிலே ஆண்டு கொள்வன் என்று உரை கூறலும் ஆம்.

திருக்குறள் நீத்தார் பெருமையுள் வந்துள்ள

சுவைஒளி ஊறுஓசை நாற்றம் என்று ஐந்தின்
வகைதெரி வான்கட்டே உலகு.

என்னும் குறளில் சுவை, ஒளி முதலான ஐந்தையும் சூக்கும தன்மாத்திரைகளாகக் கொண்டு பரிமேலழகர் உரைக்கும் உரையை அங்கே காண்க.

இறைவனுடைய அருள்வட்டத்தில்
வாழ்கின்ற அறிவுடை சீவர்களில்
சிலர் இறைவனுடைய ஏவலால் இந்நில
உலகத்தில் வந்து பிறந்து இறைவன்
ஏவிய செயல்களை நன்கு முடித்த
பின்னர் மீண்டும் இறைவனிடத்தில்
அடங்கும் செய்தியைக்
கூறுகின்றது:-

24. **''அப்பினில் கூர்மை ஆதித்தன் வெம்மையால்**
உப்பெனப் பேர்பெற் றுருச்செய்த அவ்வுரு
அப்பினில் கூடிய தொன்றாகும் ஆறுபோல்
செப்பினில் சீவன் சிவத்துள் அடங்குமே''. (136)

இப்பாட்டு அப்பு என்கிற நீரின்கண் உள்ள சுவை என்கின்ற கூர்மைப் பொருள், ஆதித்தனுடைய வெம்மை யினாலே உப்பு என்கின்ற உருவத்தைப் பெறுகின்றது என்றும், அதுவேபின் நீரைச் சார்ந்தவிடத்து தன்னுடைய உருவத்தை இழந்துவிடுகின்றதென்றும் ஒரு செய்தியைக் கூறுகின்றது.

திருக்களிற்றுப்படியார் பாடலான,

''சிவனெனவே தேறினன்யான் என்றமையால்
இன்றும்
சிவனவனி வந்தபடி செப்பில் - அவனிதனில்
உப்பெனவே கூர்மை உருச்செய்யக் கண்டமையால்
அப்படியே கண்டா யவன்''. (91)

என்னும் இப்பாடல் திருமூலர் சொல்லுகின்ற உவமையையே எடுத்தாளுகின்றது.

மேற்கண்ட இரண்டுக்கும் வேறுபாடு உண்டு. திருக்களிற்றுப்படியார் பாடல் வடிவமில்லாத சிவம், வடிவம் பெற்று வருவதற்கு இவ்வுவமையைக் கையாளுகின்றது. அது ''சிவன் அவனி வந்தபடி செப்பில்'' என்ற சொல்லால் புலனாகும்.

திருமந்திரப் பாடலோ வடிவமில்லாத சீவன் வடிவம் பெற்று வரும் என்ற செய்தியைக் கூறுகின்றது. மேற்கண்ட திருமந்திரப் பாடலைச் சீவனுக்கே பொருந்துமாறு பொருள்கொள்ள வேண்டும்.

வடிவமில்லாமல் இறைவனுடைய அருள் உலகத்தில் வாழ்ந்து வருகின்ற சீவன் இறைவனுடைய அருளாணையின்படி, நிலவுலகத்திற்கு வந்து, பல அருட்செயல்களைச் செய்துவிட்டு திரும்பவும் அருள் உலகத்தை அடைதலை நமக்கு விளக்கிக் காட்ட வந்த பாட்டாக இருக்கின்றது.

அப்பினில் கூர்மை ஆதித்தன் வெம்மையால் உப்பு எனப்பேர் பெற்று உருச்செய்தது;

நீரின்கண் உப்புச்சுவை வடிவாய் நீரின்கண் அடங்கியுள்ள கூர்மை என்னும் பொருள் ஞாயிறின் வெப்பத்தினாலே உப்பு எனப் பேர் பெற்று அதற்குரிய உருவத்தைப் பெற்றது.

இப்பாட்டு உள்ளுறை உவமையாகும். இந்த உவமையால் பெற்ற கருத்து என்ன எனில் அப்பு என்கின்ற இறைவனுடைய திருவருள் வளாகத்தில் வடிவமில்லாமல் இருந்த ஆன்மா இறைவனுடைய வெம்மை என்னும் வேண்டலால் உருவம் பெற்று உலகத்திற்கு வந்து இறைவன் ஏவிய பல திருப்பணி களை எல்லாம் செய்தது.

உருச்செய்த அவ்வுரு அப்பினில் கூடி அது ஒன்று ஆகும் ஆறுபோல்:

உப்பின் உருவத்தை அடைந்த அது திரும்ப நீருடன் கூடி ஒன்றாய் விடும். அந்த முறையைப் போல,

செப்பினில் சீவன் சிவத்துள் அடங்குமே:

இங்கே செப்பு என்பது சொல்லாகிய விடை, இறைவனுடைய சொல்லாகிய விடையைப் பெற்று நில உலகத்தில், மக்கள் உருவத்தைத் தாங்கி வந்து பல நல்ல காரியங்களை எல்லாம் செய்து முடித்த அச்சீவன் மாணிக்க வாசகரைப்போல சிவசோதியில் பின் கலந்துவிடும் என்க.

வெம்மை என்கின்ற சொல் சூரியனைக் குறித்தால் வெப்பம் என்று பொருள்படும். இறைவனைக் குறித்தால் ''வெம்மை வேண்டல்'' என்னும் (தொல்காப்பியம் 'சொல்' உரியியல்) நூற்பாப்படி வேண்டுதல் என்ற பொருளில் வரும். அறிஞர் இவ்வேறுபாடுகளைக் கருதி இப்பாடலைப் படிக்க.

மேற்பாடல் கருத்தைக் கீழ்வரும் திருவாசகப்பாடலால் அறிந்து கொள்ளலாம்.

''நீக்கி முன்னெனைத் தன்னொடு
நிலாவகை குரம்பையில் புகப்பெய்து
நோக்கி நுண்ணிய நொடியன சொற்செய்து
நுகமின்றி விளாக்கைத்துத்
தூக்கி முன்செய்த பொய்யறத் துகளறுத்
தெழுதரு சுடர்ச்சோதி,
ஆக்கி ஆண்டுதன் அடியாரிற் கூட்டிய
அதிசயம் கண்டாமே'' (அதிசயபத்து – 8)

இதன் பொருள்:

மாணிக்கவாசகனாகிய யான் முன்னர் இறைவனோடு கூடி இருந்தேன். பின்னர் என்னை அக்கூட்டுறவிலிருந்து நீக்கி நில உலகத்திற்கு வரச்செய்து, மக்கள் உடம்பில் புகுமாறு செய்தான். அவ்வாறு புகுந்த என்னை இறைவன் அருட்குரவனாய் வந்து நோக்கி, நுண்ணிய நொடியனவாகிய உயர்ந்த சொற்களை எனக்கு உபதேசித்து, கருவியாகிய ஏரில்லாமல் விளாக் கோளினாற்போல, என்னை அகப்படுத்தி, பண்பு செய்து, முன் யான் செய்த பொய்யொழுக்கமாகிய குற்றத்தை நீக்கி, ஆட்கொண்டு என்னைத் தன் அடியாரோடு கூட்டிக்கொண்டான். இப்படி இறைவன் செய்த செயல் அதிசய செயல் என்க.

இப்பாட்டினாலே, இறைவனுடைய அருள் வளாகத்தில் இருந்த மாணிக்கவாசகரை உலகத்தில் அவரைக் கொண்டு, செய்யவேண்டிய நல்ல காரியங்களுக்காக, அவரைத் தன்னுடன் இல்லாமல் நீக்கி, மக்கள் உடம்போடு பிறக்கச்செய்து, அங்கு பல அருட்செயல்களை எல்லாம் செய்து முடித்த பின் தன் அடியார் கூட்டத்துடன் சேர்த்துக் கொண்டார் என்ற செய்தியை மேற்கண்ட பாட்டின் பொருளோடு ஒப்பு நோக்கி அறிக.

மேலும் ஆலாலசுந்தரர் என்ற பெயரால் கைலையில் வாழ்ந்திருந்த அவரை சுந்தரமூர்த்தியாக நிலவுலகில் பிறக்கச் செய்து, பின் அவரை ஆட்கொண்ட செய்தியையும் ஒப்புநோக்குக.

இதனால் அருளாளர்கள் பலர் நிலவுலகத்தில் வந்து பிறந்து பல அருட் செயல்களைச் செய்துமுடித்து பின் இறைவனோடு ஒன்றுதலை நாம் அறிந்துள்ளோம்.

அதனால் ஆறுபோல் (மேலே சொன்ன நெறிப்படி) செப்பினில் சீவன் சிவத்துள் அடங்கும் என்றார்.

மூவகை உடம்பையும் பெற்று பரப்பிரகிருதியாகிய சேதனப்பிரகிருதி என்னும் கடலில் அழுந்திய உயிர்க்குச் சிவபெருமானுடைய திருவடியே உயிர்விடமாகிய கரை என்பதை உணர்த்துகின்றது.

25. "அடங்குபே ரண்டத்து அணுஅண்டம் சென்றங்கு
இடங்கொண்ட தில்லை இதுவன்றி வேறுண்டோ
கடந்தோறும் நின்ற உயிர்கரை காணில்
திடம்பெற நின்றான் திருவடி தானே" (137)

அடங்கு பேரண்டத்து அணுஅண்டம் சென்றங்கு இடங் கொண்டது:–

அபரப்பிரகிருதியும், பரப்பிரகிருதியும் ஆகிய இரண்டும் அடங்கி இருக்கின்ற ஒரு பெரிய பிரகிருதியில், அணு அண்டம் என்று சொல்லக்கூடிய சேதனப்பிரகிருதியாகிய பரப்பிரகிருதி மேலே பொருந்தி அடங்கியுள்ளது.

இல்லை:-

சீவபூதத்திற்கு இடமாகிய அந்த பரப்பிரகிருதி அதனுள் வாழும் சீவனுக்கு நிலையான இடமாக இல்லை.

கடந்தொறும் நின்ற உயிர் கரை காணில்:-

பரப்பிரகிருதியாகிய சேதனப்பிரகிருதியில் தூல உடம்பு, சூக்கும உடம்பு, காரண உடம்பு எனப் பெயர் படைத்த குடங்கள் தோறும், பற்றுக்கொண்டு நின்ற ஆன்மாவிற்கு நிலையான உய்விடமாகிய கரை எது என்று ஆராயில்,

திடம் பெற நின்றான் திருவடி தானே!

எல்லாவகையான ஆற்றலோடும் கூடி நின்ற சிவ பெருமானுடைய குருபாதம் என்னும் திருவடியே என்க.

இது வன்றி வேறு உண்டோ;-

பிறவிக் கடலில் உழலும் ஆன்மாவிற்கு இறைவனுடைய திருவடியாகிய கரையே அன்றி உய்யும் இடம் இதைவிட வேறு உண்டோ? இல்லை என்றது.

விளக்கம்:-

நாம் வாழும் உலகமாகிய பிரகிருதி சடப்பிரகிருதி என்றும், சேதனப்பிரகிருதி என்றும் இரண்டு வகையாக உள்ளது, இவற்றுள் முதலாகிய சடப்பிரகிருதி நிலம், நீர், தீ, காற்று. ஆகாயம், மனம், புத்தி, அகங்காரம் என எட்டு பிரிவாக உள்ளது. இதனை அபரப் பிரகிருதி என்பர். இதற்கு மேல் உள்ளது சேதனப் பிரகிருதியாகும். இது அறிவுப் பொருளாகிய ஆன்மாவுக்கு உரியது. உலகத்தில் உள்ள எல்லாச் சீவபூதங் களும் (சீவாத்மா) "சேதனப்பிரகிருதி" என்று கூறப்படும்.

இக்கருத்துக்களைக் கீதை ஏழாவது அத்யாயத்தில் நான்காவது சுலோகத்தில் உள்ள "பூமிர் ஆபோ" என்ற சுலோகமும், இதனை அடுத்துள்ள சுலோகமும் நமக்குத் தெளிவாக உணர்த்துகின்றன. சேதனப் பிரகிருதியாகிய பரப்பிரகிருதியில் வாழுகின்ற சீவன் தனக்குக் கீழுள்ள அபரப் பிரகிருதியாகிய நிலம் முதலான எட்டுடன் கூடிப் பற்றுச் செய்து பிறப்பு இறப்புக்கு உரியதாயிற்று. அத்தகைய சீவன் பக்குவம் பெற்று அபரப் பிரகிருதியின் பற்று நீங்கி, தனக்கு மேல் உள்ள சிவத்தை உணர்வில் வைத்தால் அது சிவத்துடன் 'கூடி' அங்கே நிலை பெற்று வாழும் என்க. இக்கருத்தைத் தான் திருமூலர் "செப்பினில் வாழ்கின்ற சீவன் பின் சிவத்துள் அடங்கும்" என்றார்.

இப்பகுதிக்குப் பிறர் எல்லாம் பொருத்தமான உரையை எழுதவில்லை என்பதை அறிஞர் கருதுக.

பிரகிருதி என்ற வட சொல்லைத் திருமூலர் 'அண்டம்' என்ற தமிழ்ச் சொல்லால் குறிப்பிடுகின்றார்.

முதற்பாட்டில் தண்நின்ற தாளை தலைக் காவல் முன்வைத்து என்று கூறினார். அங்குக் கூறிய தண்நின்ற தாளாகிய திருவடியின் சிறப்பை இப்பாட்டு கூறுகின்றது.

26. "திருவடி யேசிவ மாவது தேரில்
திருவடி யேசிவ லோகம் சிந்திக்கில்
திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே" (138)

இப்பாட்டு அடிமறிமண்டிலப் பாடல்போல் வந்துள்ளது.

சிவமும், சிவலோகமும், செல்கதியும், தஞ்சமும் எவை என்ற வினாவிற்கு விடை கூறுவது போல் இப்பாடல் அமைந்துள்ளது.

தோரில் திருவடியே சிவமாவது:-

பரப்பிரகிருதியில் வாழ்ந்து, அப்பரப்பிரகிருதியாகிய நிலம் முதலானவற்றோடு பற்றுச் செய்து பிறவியில் உழலும் உயிர்க்கு உய்யும் பொருள் எது என்று ஆராய்ந்தால், சத்திய, ஞான, அனந்த ஆனந்த நிலையைய் பெற்றிருக்கின்ற சிவம் என்னும் குருபாதமே என்க. இதனை மணிவாசகர் பூங்கழல் என்பர்.

சிந்திக்கில் திருவடியே சிவலோகம்:-

கருதிப் பார்த்தால் அக்குருபாதத்தை அறிவதற்குக் கருவியாய் உள்ள தத்துவமசி மகாவாக்கியம் என்னும் சிவலோகமும் திருவடி என்க.

விளக்கம்;

துவம்பத சீவதுரியத்துள்ளும், தத்பத பரதுரியத்துள்ளும், சிவம் உள்ளீடாய் கண்டமாய் வாழும் என்க. அசிபதத்துள் சிவம் அகண்டமாய் வாழும் என்க. இச்சிவம் வாழ்வதற்கு இடமாதலால் தத்துவமசி மகாவாக்கியம் சிவலோகமாயிற்று.

திருவடியே செல்கதியது செப்பில் திருவடியே தஞ்சம் உள்தெளி வார்க்கே:

செப்பில் பரப்பிரகிருதியாகிய சேதனப் பிரகிருதியில் வாழும் உயிர்களுக்கெல்லாம் மேல் குறிப்பிட்ட இரண்டு திருவடிகளே செல்கதியாகவும் தஞ்சமாகவும் உள்ளன என்க.

கதி — நெறி
தஞ்சம் — அடைக்கலம்.

விளக்கம்;

திருமந்திரம் ஆறாம் தந்திரத்துள் திருவடிப்பேறு என்ற தலைப்பில் பல செய்திகளைச் சொல்லுகின்றார். அவற்றைக் கருதினால் திருவடி என்பது உருவத் திருமேனியை உடைய கடவுளின் திருவடி அல்ல. ''குருபாதம் (அ)பூங்கழல் என்கின்ற திருவடியாகும் என்றசெய்தி நமக்குப் புலனாகின்றது.

மேற்கண்ட பாட்டில் சிறிது வேறுபட்டு அங்கே வருகின்ற பாட்டை அறிஞர் கூர்ந்து கருதுக. அப்பாடல் வருமாறு:

''திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.'' (1598)

மேலே குறி அறிவிப்பான் குரு பரனாமே
என்று கூறினார். அக்குருவினைப்
போற்றி வழிபடும் முறையினை
இப்பாட்டு கூறுகின்றது

27. ''தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே'' (139)

இப்பாட்டும் அடிமறி மண்டிலம்போல் உள்ளது.

குருவின் திருவார்த்தை கேட்டல் தெளிவு

ஆசிரியன் கூறுகின்ற திரு என்னும் ஞானத்தைத் தருகின்ற உபதேச மொழியாகிய தத்துவமசி என்னும் திருவாசகத்தைக் கேட்பது ஒருவருக்குத் தெளிவான பொருளைத் தருவதாகும்.

குருவின் திருமேனி காண்டல் தெளிவு, குருவின் திருநாமம் செப்பல் தெளிவு, குருவுரு சிந்தித்தல் தானே தெளிவு:

குருவினுடைய திரு என்னும் ஞானத்தைத் தருவதற்கு இடமான உடம்பைத் தன்னுடைய கண்ணினாலே காண்பது (தரிசிப்பது) அவர் உபதேசித்த உபதேச மொழிக்குத் தெளிவைத் தரும். அவருடைய ஞானத்தைத் தருவதற்கு உரிய பெயரை, நாவினாலே கூறிப் போற்றுவதும் அவர் கூறிய உபதேச மொழிக்குத் தெளிவைத் தரும். குருவின் ஞானத்தைத் தருகின்ற உருவத்தைப் பிரம்மாவின் உருவமாகவும், திருமாலிள் உருவமாகவும், உருத்திரனின் உருவமாகவும், இவைகளுக்கு மேற்பட்ட சிவத்தின் உருவமாகவும் கருதித் தியானித்து வழிபடுவது உபதேச மொழிக்குத் தெளிவைத் தருவதாகும்.

விளக்கம்:

‘கு’ என்பது அறியாமை

ரு என்பது நீக்குதல்.

எனவே அறியாமையை நீக்குபவன் குரு என்க. அக்குருவே ஐம்புலன் அறிவோடு கூடாமல் மேல் உள்ள பரஅறிவுடன் கூடி தன்னை வழிபடும் மாணவர்க்கு இலக்கான பொருளை, அதாவது மெய்ப்பொருளை உணர்த்துபவனாக உள்ளான். அச்சிறந்த குருவின் திருமேனியைக் கண்ணினால் கண்டும், அவனுடைய திருப்பெயரை நாவினால் கூறியும், அவனுடைய உபதேச மொழியாகிய திருவார்த்தையைக் காதினால் கேட்டும், அவன் திருவுருவத்தை மனித உருவமாகக் கருதாமல் தெய்வ உருவ மாகக் கருதித் தியானித்தும் போற்றி ஒழுக வேண்டும் என்பதை இப்பாட்டு கூறுகின்றது.

‘‘குருவினை மனிதனாகக் குறிப்பவன்

குருத்துரோகன்’’

என்பது வீராகமம்.

இக்குருவைப் பற்றி ஆறாம் தந்திரத்துள் சிவகுரு தரிசனம் என்ற தலைப்பில் வந்துள்ள பல பாடல்களை அறிஞர் படித்துப் பார்க்க. அவற்றுள் ஒரு பாடலைக் கீழே தருகின்றேன்.

''குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரைஉணர் வற்றதோர் கோவே.'' (1581)

ஆன்மாவகிய தான் எம்பிரானைச் சந்தித்து அடையும் பயன்:

28. **''தானே புலன்ஐந்தும் தன்வசம் ஆயிடும்**
தானே புலன்ஐந்தும் தன்வசம் போயிடும்
தானே புலன்ஐந்தும் தன்னில் மடைமாறும்
தானே தனித்தெம் பிரான்தனைச் சந்தித்தே'' (140)

தானே தனித்து எம்பிரான் தனைச் சந்தித்து:

ஆன்மாவாகிய தானே! உடம்பு முதலான ஏழு காரிய உபாதிகளில் வேறுபட்டு, எமது தலைவனாகிய இறைவனை உணர்வால் கூடினால்,

தானே புலன்ஐந்தும் தன்வசம் ஆயிடும்:

தன்னுடைய ஐந்து புலன்கன் அனைத்தும் முதலில் தன் வழி நடைபெறும்.

தானே என்பதில் ஏகாரம் அசை.

தானே புலன் ஐந்தும் தன்வசம் போயிடும்:

பின், தன்னுடைய ஐந்து புலன்களும் தனக்கு மேல் உள்ள பரனுடன் கூடித் தன்வசம் போய், பரவசமாய் விடும்.

தானே புலன் ஐந்தும் தன்னில் மடைமாறும்:

தன்னுடைய ஐந்து புலன்களும் தானாகிய பசுவிற்கு உரிய தாகாமல், தனக்கு மேல் உள்ள பரனுடன் கூடிப் பரகருவியா கவும், சிவனுடன் கூடிச் சிவக்கருவியாகவும் மாறிவிடும் என்க.

தான் என்னும் ஒருமை உணர்த்தும் பொதுச்சொல் இங்கே ஆன்மாவைக் குறிக்க வந்துள்ளது.

விளக்கம்:

ஆன்மாவாகிய தான், எம்பிரானைச் சந்தித்ததால் தன்னு டைய ஐம்பொறிகள் பாவ புண்ணியங்களில் விடுபட, தான் வீடுபெறும் என்க. இதனை,

"இந்தி யங்களால் பாவபுண் ணியங்கள் வந்தெய்தும்
இந்தி யம்சிவத்து ஆக்கினார்க்கு இருவினை
இல்லை"
(கரணாப்பிதம் - 5)

என்னும் சித்தாந்த சிகாமணிப் பாடலைக் கருதுக.

ஆன்மா இந்திரியங்களுடன், அந்தக்கரணங்களுடன் கூடி, உலகப் பொருள்களைச் சந்தித்தால் போக்தா ஆகிறது. அதே ஆன்மா இந்திரியங்களுடன், அந்தக்கரணங்களுடன் கூடி எம் பிரானாகிய சிவத்தைச் சந்தித்தால் உலக போக்தா ஆகாமல் சிவபோக்தா ஆகிவிடுகின்றது. அந்த நிலையில் இந்திரியங் களும், அந்தக்கரணங்களும் பசுகரணத்தில் நீங்கி சிவகரணம் ஆகிவிடும்.

நந்தியாகிய சிவபெருமானைச் சந்தித்து பெறுவது நந்தியின் போதம் என்க.

29. "சந்திப் பதுநந்தி தன்திருத்தாளிணை
சிந்திப் பதுநந்தி செய்ய திருமேனி
வந்திப் பதுநந்தி நாமம்என் வாய்மையால்
புந்திக்குள் நிற்பது நந்திபொற் போதமே". (141)

நந்தி தன் திருத்தாளிணை சந்திப்பது:

எம்பிரானாகிய நந்திதன் ஞான இரண்டு வடிவாகிய அனந்தம், ஆனந்தம் என்ற திருவடிகளையே இடைவிடாது உணர்வது என்க.

நந்தி செய்ய திருமேனி சிந்திப்பது;

நந்தியின் ஞானத்தைத் தரும் உடம்பே உள்ளத்தால் சிந்திப்பதற்கு உரியது.

நந்தி நாமம் வந்திப்பது:

நந்தியினுடைய ஞானத்தைத் தரும் பெயரே என் வாயினால் வணக்கம் கூறத் தகுதி உடைத்தாம்.

என் வாய்மையால் புந்திக்குள் நிற்பது நந்தி பொற் போதமே:

என்னுடைய மெய்ப்பொருள் ஆராய்வால் என் உள் உணர்வுக்குள் நிற்பது நந்தியால் உபதேசிக்கப் பெற்ற மகா வாக்கிய போதம் என்னும் பரஞானம் ஆகும்.

விளக்கம்:

வேதம், ஆகமம் என்னும் இரண்டுள் உள்ள ஞான பாதப் பகுதிகளை ஐயம் திரிபு அறக் கற்று பின் சிந்தித்து, மெய்ப் பொருளைத்தேறி, தெளியும் அநுபவ ஞானமே இங்கு கூறப் பட்ட நந்தியின் போதம் என்கின்ற பரஞானம் ஆகும் என்க.

போதம் தரும் நந்தியை, போதத்தில்
வைத்த புண்ணியர் அடையும் பயனை
இப்பாட்டு கூறுகின்றது.

30: "போதம் தரும்எங்கள் புண்ணிய நந்தியைப்
போதந் தனில் வைத்துப் புண்ணிய ராயினார்
நாதன் நடத்தால் நயனம் களிகூர
வேதந் துதித்திடப் போயடைந்தார் விண்ணே"
(142)

போதம் தரும் எங்கள் புண்ணிய நந்தியை:

(விண்ணினின்று இழிந்து, வினைக்கு ஈடாய் மெய் கொண்டு ஆன்மாவின்கண் அருட்கண்ணை விழிப்பித்து களிம்பறுத்து, களிம்பு நீங்கி தெளிந்த ஆன்ம உள்ளத்தில் பவளம் என்கின்ற அருட்சக்தியை பதித்து, ஆன்மாக்கள் வாழும் உடலில் காயக் கடவுளாகிய சூரியனாய்த் தோன்றி, ஆரியனைச் சார்ந்து நின்று, மும்மலங்களையும் அறுத்து), ஆன்மாக்களுக்குப் போதத்தைத் தருகின்ற எங்கள் புண்ணிய நந்தியை.

போதம் தனில் வைத்துப் புண்ணிய ராயினார்:

ஐம்பொறி உணர்வில் வைக்காமல் பரஞானமாகிய உள் உணர்வில் வைத்து, தியானித்து, தியானித்ததால் உண்டாகிய சிவபுண்ணியத்தைப் பெற்றவர்,

நாதன் நடத்தால் நயனம் களிகூர:

சிவபெருமான் செய்யும் ஞான நடனத்தைக் கண்டதால் தன்னுடைய கண் மகிழ்ச்சி மிக:

விளக்கம்:–

நாதனுடைய ஞான நடனத்தைத் தன் உணர்வுக் கண்ணால் கண்ட காரணத்தால் அந்த உணர்வுக்கண் களிப்புமிக,

இறைவன் செய்யும் ஞான நடனத்தைக் கீழ்வரும் உண்மை விளக்கப் பாட்டால் உணர்க.

"மாயை தனைஉதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அழுக்கிஅருள் தானெடுத்து - நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பரதம் தான்."

எந்தையாராகிய இறைவன் செய்கின்ற பரதநாட்டியம் என்கின்ற ஞானநடனம் எத்தகையது எனில், "ஆன்மாவின் மாயா மலத்தை உதறியும், அதனுடைய வலிய தீவினைகளைச் சுட்டும், ஆணவமலத்தைக் கெடும்படி அழுத்தியும், அருளால் ஆன்மாவை பாசத்தினின்றும் எடுத்தும், ஆனந்தக் கடலில் அழுத்தியும், என்னும் இவற்றைச் செய்தல் எந்தையார் பரதநாட்டியம் என்கின்ற ஞான நடனமாகும்.

வேதம் துதித்திடப் போய் விண் அடைந்தார்:-

வேதங்களைக் கற்றவர்களெல்லாம் புகழ்ந்து கூறும்படி விரிவு, குவிவு இல்லாத ஞானவெளியைப் பெற்றுவிட்டார்.

ஆகவே புண்ணியராயினார் நடத்தால் நயனம் களிகூர, (இருந்து) துதித்திட விண்போய் அடைந்தார் என்று முடித்துக்கொள்க.

வேதம் துதித்திட என்பதில் வேதம் ஆகுபெயர்.

விளக்கம்:-

ஆன்மிகப் பொருளாகிய சீவனையும், பரனையும், சிவனையும் ஐம்பொறி உணர்வால் உணரமுடியாது. உள்ளுணர் வாகிய மேலே குறிப்பிட்ட போதம் என்கின்ற அநுபவ அறிவினால்தான் காண முடியும் என்பதை,

''அறிவாகிய நீ எனும் அப்பொருள்தான்
பொறியின்வழி நின்று அறியும் பொருளோ?
போதக்கண் விழித்துஅறி யும்பொருளே''?
(சசிவன்ன போதம் – 59)

என்னும் சசிவன்னபோதப் பாடல் பொருளால் அறிக. மேலும்,

''வாக்கொடு மனத்துக் கெட்டொணாப் பொருளை
மற்றுள புலன்களொன் றாலே.
நோக்குமா றெங்ஙன்? கருமம்ஒன் றாலும்
நுண்ணிய பொருளை நண்ணாரே
தாக்கிலா அந்தக் கரணமது உடையார்
தத்துவ ஞானநல் விழியால்,
போக்கிலா தெங்கு மாகிய பொருளைப்
புரையறக் காண்பரெப் பொழுதும்'' (321)

என்னும் பெருந்திரட்டுப்பாடல் போதத்தை ''தத்துவஞானக் கண்'' என்று கூறுகின்றது.

நாதன் நடத்தால் கதிபெறுதலை,
''புண்டரி கப்பதப் பொன்னம் பலக்கூத்து
கண்டுசே வித்துக் கதிபெறு வார்களே'' (2777)

என்னும் திருமந்திரப் பாடலால் அறிக.

''புண்ணியராயினார் போய் அடைவார் விண்ணே'' என்று எதிர் காலம்பட சொல்லவேண்டிய சொற்றொடரை அடைந்தார் விண்ணே'' என்று இறந்தகாலம்படக் கூறினார். இது தேற்றப் பொருளில் வந்த கால வழுவமைதி.

பேராசிரியர் திரு. அடிகளாசிரியரின் வாழ்வும் பணியும்

(அ. சிவபெருமான்)

தமிழ்நாட்டில் தென்னார்க்காடு மாவட்டம் கல்லக்குறிச்சி வட்டத்தின் தென்கோடியில் வடவெள்ளாற்றின் வடக்குக் கரையில் உள்ளது குகையூர் என்னும் கூகையூராகும். இவ்வூரை இலக்கியங்கள் குகையூர் என்று கூறும். பொது மக்கள் கூகையூர் என்று கூறுவர்.

திருமூல நாயனாருடைய கொள்கையில் பயிற்சியுடைய சித்தநாதர் என்னும் சித்தர் ஒருவர் இவ்வூருக்கு வந்து ஆற்றங்கரைப் புதருள் தங்கி, சிவயோக சமாதியை மேற் கொண்டிருந்தார். அவர் அட்டமா சித்தியிலும் வல்லவராய் இருந்தார்.

அவ்வூரை ஆண்டிருந்த குறுநில மன்னனாகிய **மாலாங்கன்** என்பவன் சித்தநாதருடைய பெருமையை உணர்ந்து தன் மனைவியுடன் வந்து பேரன்புடன் அவர்க்குப் பணிவிடை செய் தொழுகினான் அவ்விருவருடைய பேரன்பினையும் மகப்பேறின்றி மூப்படைந்துள்ள நிலையினையும் உணர்ந்த சித்தநாதர் அவ்விருவரையும் இளமை உடையவராக ஆக்கி, வீரசைவ சமய நெறியை மேற்கொண்டு வாழுமாறு செய்து, பக்குவற்கு உபதேசிக்கும் மாதவக் குருபரனாக மாலாங்கனை ஆக்கினர்.

அம்மாலாங்கனிலிருந்து அவன் பரம்பரை சித்தநாதேச்சுரா தீனமாக ஆயிற்று.

அப்பரம்பரையில் பிற்காலத்தில் **பட்டத்துப் பெரியசாமி ஐயர்** என்பவர் வளர்ந்து வந்தார். அவர் மனைவி **குங்கும அம்மாள்** ஆவார். அவ்விருவரும் நன்கு படித்தவர்.

அவ்விருவர்க்கும் கி.பி **1910**-இல் **சாதாரணயாண்டு சித்திரைத் திங்கள் ஐந்தாம் நாள் ஞாயிற்றுக்கிழமை தனுர் இலக்கினத்தில் பூசம்நாளில் திரு. அடிகளாசிரியர் முதல்மகனாகப் பிறந்தார்.** இவரின் பிள்ளைப்பெயர் **குருசாமி அய்யர்** என்பதாகும். பிற்காலத்தில் தனித்தமிழ் இயக்கத்தலைவர் தவத்திரு **மறை**

மலையடிகளார் கருத்துப்படி **திரு. அடிகளாசிரியர்** எனப் பெயரை மாற்றிக் கொண்டார்.

இளமைக்காலமும் கல்வியும்:

இவர்க்கு ஏழாம் யாண்டில் தந்தையார் காலமாகி விட்டார். இவர் தாயார் குங்கும அம்மாள் என்பவர்தான் இவரைப் பேணிப்புரந்து கல்வி கற்குமாறு செய்தார் பெரம் பலூருக்கு அண்மையிலுள்ள நெடுவாசல் என்னும் ஊர் இவர் தாயார் பிறந்த ஊராகும். தாய்மாமன் இருவராவர். மூத்தவர் திரு. **கு. சுப்பிரமணிய தேவர்.** இளையவர். திரு. **கு. சிவப்பிரகாச தேவர்** ஆவார். இவ்விருவரும் நன்கு தமிழ் பயின்றவர்கள். மருத்துவக்கலை, சோதிடக்கலை ஆகியவற்றிலும் வல்லவர்கள். அடிகளாசிரியர் இவர்கள் (தாய்மாமன்) வீட்டில் தங்கி, தமிழ்ப் பயிற்சியையும் வடமொழிப் பயிற்சியையும் பெற்றார்.

பெரம்பலூரில் வாழ்ந்த **திரு. மருதநாடார்** என்பவரிடம் சோதிடக் கலையைக் கற்றுக்கொண்டார். முசிறி அரசினர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராய் இருந்த உயர்திரு. **வீ. குமாரவீரையர்** என்பவரிடம் நன்னூல் காண்டிகை உரையை மட்டும் முறைப்படி பாடங் கேட்டார். 1937-இல் இவர் தனியாகப் பயின்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் தேர்வெழுதித் தமிழ்ப் புலவர் பட்டத்தைப் பெற்றார்.

மயிலம் கல்லூரியில் பணி:

14—7—1938-இல் மயிலம் திருமடத்தில் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி என்ற பெயரால் ஒரு தமிழ்க் கல்லூரி தோன்றிற்று. அக்கல்லூரியில் இவர் முதலாசிரியராக அமர்ந்தார். அக்கல்லூரி பல்கலைக்கழக ஒப்புதல் பெற்றபின் 1—7—41 இலிருந்து 30—11—41 வரை விரிவுரையாளராகவும், 1—12—42 இலிருந்து 1—7—1950 வரை துணைத்தலைவராகவும் அங்குப் பணியாற்றினார்.

கரந்தைத் தமிழ்க் கல்லூரிப் பணி:

பின்னர் 3-7-1950-இலிருந்து 3-7-1970 வரை தஞ்சாவூர் கரந்தைப் புலவர் கல்லூரியில் விரிவுரையாளராகவும், துணை முதல்வராகவும் பணியாற்றினார். 4—4—70-இலிருந்து ஓய்வு பெற்றார்.

ஓய்விற்குப்பின்:

சேலம் மாவட்டம் ஆத்தூரில் அமைந்திருந்த தனியார் தமிழ்க் கல்லூரி ஒன்றில் முதல்வராக மூன்றாண்டுகள் பணி யாற்றியுள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் ஆராய்ச்சி யாளராக ஓராண்டு (1977) பணியாற்றியுள்ளார்.

20—1—1982ஆம் நாளிலிருந்து 1—10 - 1985 ஆம் நாள் வரை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சுவடிப் புலத்தில் சிறப்பு நிலை இணைப்பேராசிரியராக அமர்ந்து தொல்காப்பிய ஆராய்ச்சியைச் செய்து வந்தார். அதன்பின் மூப்பின் காரண மாகத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பணியிலிருந்து தாமே விலகிக் கொண்டார். மூப்பின் காரணமாகத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பணியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்ட அவர் தம் இல்லத்திலிருந்து அப்பணியை (தொல்காப்பிய ஆய்வுப் பணியை) நிறைவு செய்து வழங்கினார்.

குடும்பம்:

இருந்தமிழே உன்னால் இருந்தேன் வானோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்.

என்று தமிழுக்காக வாழ்ந்து வரும் பேராசிரியர் அடிகளாசிரியர் அவர்கள், தம் பிறந்த ஊரிலேயே பிறந்த கூரை வீட்டிலேயே மண்தரையில் இன்னமும் அமர்ந்து இந்த மண்ணோடு இருக்கும் பற்றை நிலைப்படுத்துவார் போல் வளங்குன்றிய வாழ்வே வாழ்ந்து வருகிறார். தமிழ்ப் பணிக்காகவே தம் பொருளா தாரத்தைச் செலவிட்டு, வேண்டுமென்றே வளங்குன்றிய வாழ்வைத் தேடிக் கொண்டவராவார்.

அறிவுசான்ற மூன்று ஆண்மக்களும், அமைதி சான்ற மூன்று பெண்மக்களும் வாசுகி அனைய மனையாளுமே இவரது சொத்துக்களாக உள்ளனர். சிந்தனை செய்தே சிறந்த இவர் உடல் இன்று பலரின் சிந்தனைக்கு உரியதாக உள்ளது. எழுதி எழுதியே முதிர்ந்த இவரது கைகள் எழுத மறுக்கின்றன. நடந்தே சிறந்த கால்கள் நடை தடுமாறுகின்றன. ஆனால் சிந்தனை மட்டும் தடுமாறாமல் தமிழையே இன்றும் சிந்தித்துக் கொண்டிருக்கின்றது. அகவை (93) முதிர்ந்த நிலையில் எந்த ஆசையும் அற்று, தம் நூல்கள் அச்சேறி உலாவர வேண்டு மென்ற பற்று ஒன்றுடன் மட்டுமே இவர் வாழ்ந்து வருகிறார்.

அடிகளாசிரியர் தமிழ்ப்பணி

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு''

என்ற திருமூலர் வாக்குப்படி அடிகளாசிரியர் இன்றளவும் தமது முதிர்ந்த வயதிலும் (93) தமிழ்ப்பணி செய்து வருகின்றார். ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகள் கல்லூரிகளில் தமிழ் கற்பிக்கும் பணியை இவர் ஆற்றி வந்தார். அன்றியும் இடையுறாது உழைத்துத் தமிழில் நூல்கள் எழுதுவதிலும் ஈடுபட்டுள்ளார் . இதுகாறும் இவர் உரைநூல்கள், பதிப்பு நூல்கள், ஆராயச்சி நூல்கள், படைப்பிலக்கிய நூல்கள் என்ற வகையில் 55 நூல்களைப் படைத்துள்ளார் அவை வருமாறு:

அடிகளாசிரியர் படைப்புகள்

1. உரைநூல்கள்

அ) உரைப் பதிப்புகள் (உரையோடு விளங்கிய நூல்களைப் பதிப்பித்தல்)

1. அருணகிரி அந்தாதி–சரசுவதிமகால் வெளியீடு 1967
2. மருதூரந்தாதி உரை–சரசுவதிமகால் வெளியீடு 1968
3. காலச்சக்கரம்–சரசுவதிமகால் வெளியீடு (சோதிட நூல்) 1969–79
4. வராகர் ஓராசாத்திரம் (சோதிட நூல்) சரசுவதி மகால் வெளியீடு 1970–8 –91
5. சிவஞான தீபம் உரை - சரசுவதிமகால் வெளியீடு 1970
6. சிவப்பிரகாச விகாசம் உரை - சரசுவதி மகால் வெளியீடு 1977

ஆ) உரைவரைவுகள் (தாமே உரை எழுதி வெளியிட்டவை)

7. முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் உரை 1938
8. சேக்கிழார் பிள்ளைத் தமிழ் உரை 1967
9. தமிழகக் கல்வெட்டு விளக்கவுரை (மு. கோவிந்தராசனாருடன் இணைந்து எழுதியவை) 1967–58
10. திருவலஞ்சுழி தேவாரப்பாடல்கள் உரை 1956
11. திருவாசகக் கோயில் திருப்பதிகம் உரை 1981
12. சிவபுராணச் சிற்றுரை 1986–99
13. சதமணிமாலை மூலவும் உரையும் 1990
14. சித்தாந்தசிகாமணி அங்கத்தலத் திரட்டு உரை 1992
15. ஸ்ரீமத் சிவஞானபாலயதேசிகர் திருப்பள்ளி எழுச்சி உரை 1993

16. குதம்பைச்சித்தர் பாடலும் உரையும் 1999
17. இட்டலிங்க அபிடேக மாலை மூலமும் உரையும் 2001

2. பதிப்பு நூல்கள்

(ஓலைச் சுவடிகளிலிருந்து பதிப்பித்தவை)

18. வீரசைவப் பிரமானம் 1936
19. சதமணிமாலை (மூலம் மட்டும்) 1938
20. சிவப்பிரகாச விகாசம் (மூலம் மட்டும்) 1939
21. காமநாதர் கோவை 1957
22. மேன்மைப் பதிகம் 1957
23. சதுர்லிங்க தசகோத்திர சதகம் 1958

3. ஆராய்ச்சி நூல்கள்

24. தொல்காப்பியம்-எழுத்து-இளம்பூரணம் (அரிய ஆராய்ச்சிப் பதிப்பு) 1966
25. 'ஐவகையடியும்' என்னும் தொல்காப்பிய நூற்பா விளக்கம் (சென்னைப் பல்கலைக்கழகம்) 1977
26. தமிழ் இலக்கண இலக்கியங்களில் சைவசித்தாந்தம் 1978
27. தொல்காப்பியம் - சொல் - இளம்பூரணம் (தமிழ்ப் பல்கலைக்கழகம்) 1990
28. தொல்காப்பியம் - பொருள் - செய்யுளியல் (தமிழ்ப் பல்கலைக்கழகம்) 1985
29. தொல்காப்பியம் - பொருள் எட்டு இயல் மட்டும் (தமிழ்ப் பல்கலைக்கழகம்) (அச்சில்)

4. படைப்பிலக்கிய நூல்கள்

அ) செய்யுள் வடிவம்

30. பிள்ளைப்பாட்டு 1945
31. திருஅரசிலிக் காதை 1948
32. குழந்தை இலக்கியம் 1963
33. சான்றாண்மை (கோப்பெருஞ்சோழன் பற்றியது) 1964-1975
34. சென்னிமலை முருகன் தோத்திரம் 1980
35. அரசியல் இயக்கம் 1981
36. பல்சுவைப் பண்ணத்திப் பாடல்கள் (குழந்தை இலக்கியம்) 1983
37. அருள்திரு மாரியம்மன் திருப்பதிகம் 1984
38. உளத்தூய்மை 1984-94

39. தண்ணிழல் (திருமுடிக்காரியைப் பற்றிய அரிய இலக்கியம்) 1990
40. மறவர் நத்தக்குன்றமரும் திருமுருகன் 1993
41. தொழிலியல் 1993
42. மெய்ப்பொருட் காதை (மெய்ப்பொருள் நாயனார் வரலாறு) 1995
43. தமிழ் மாண்பும் தமிழ்த் தொண்டும் (தமிழியக்க வெளியீடு) 1996
44. ஒன்பான்கோள் வணக்கப்பாடல்கள் (தமிழியக்க வெளியீடு) 1999

(ஆ) உரைநடை

45. எங்களூர் 1937
46. தொடக்கப்பள்ளி – நாடகம் 1949
47. வீரசைவ சிவ பூஜாவிதி 1976
48. விலையேற்றமும் வாழும் வழியும் 1984
49. திருமூலரும் பேருரையும் (தமிழக அரசின் முதற்பரிசு பெற்ற நூல்) 1998
50. காயத்துள் நின்ற கடவுள் 1999
51. திருவாசக அநுபூதி 2000
52. கீதையின் அறிவுப் பொருள் 2000
53. திருமந்திர உணர்வு 2001
54. தொல்காப்பியச் செய்யுளியல் – உரைநடை (அச்சில்)

பொருள் முட்டுப்பாட்டினால் முடங்கிக் கிடக்கும் அச்சேறா நூல்கள்

1. குழந்தை இலக்கியம் (தொகுதி மூன்று)
2. கலித்தொகை உரை (குறிஞ்சிக் கலி)
3. பிரபுலிங்கலீலை உரை
4. அடிகளாசிரியரின் சமுதாயப் பாடல்கள்
5. அடிகளாசிரியரின் இலக்கணக் கட்டுரைகள்
6. அடிகளாசிரியரின் இலக்கியக் கட்டுரைகள்
7. திருக்குறள் உரை (133 குறள் வரை)
8. முப்பால் – உரைநடை
9. சிவஞான பாலைய சுவாமிகள் கலம்பகம் மூலமும் உரையும்

பேராசிரியர் திரு. அடிகளாசிரியரைப் பற்றிய அரிய செய்திகள்

1. இவரின் இயற்பெயர் குருசாமி. இவர் மறைமலை அடிகளாரின் தொடர்பால் தம்பெயரை 'அடிகளாசிரியர்' என்று மாற்றிக் கொண்டார். மேலும், இவர் வீரசைவ ஆசிரியப் பரம்பரையினர் என்பதால் 'திரு' என்ற சொல்லை 'ஸ்ரீலஸ்ரீ என்ற சொல்லிற்குப் பதிலாகச் சேர்த்து திரு. அடிகளாசிரியர் என்று அழைக்கப்படுகின்றார்.

2. திரு அடிகளாசிரியர், குகையூர் திருமூலசித்தநாதேச்சுர ஆதீனத் தலைவராக (குருவாக) அமர்ந்து அருளாட்சியும் செய்து வருகின்றார். இவ்வாதீனத்தில் எக்காலத்திலும் 'சிவம்' விளங்க வேண்டும். மேலும் எல்லோரும் வந்து போகின்ற ஒன்று படுகின்ற ஞானநூல் நிலையமாகவும் இது இருத்தல் வேண்டும் என்பது இவரது குறிக்கோளாகும். இதற்காகவே இவர் பல ஆன்மிக நூல்களை எழுதி நல்ல பல சீடர்களை உருவாக்கி வருகின்றார்.

3. தமிழோடு தன்னைக் கரைத்துக் கொண்ட அடிகளாசிரியர் மயிலம், கரந்தை ஆகிய இடங்களில் அமைந்துள்ள கல்லூரிகளில் பேராசிரியராகவும், முதல்வராகவும் பணியாற்றிய பெருமையர், சென்னை, தஞ்சைப் பல்கலைக் கழகங்களின் ஆய்வுப் பணியில் முத்திரைப் பதித்தவித்தகர்.

4. செய்யுள், உரைநடை, புத்துரை, பதிப்பு, ஆராய்ச்சி என்ற வகையில் 55 நூல்களைத் தந்து தமிழுக்கு வளம் சேர்த்த 93 வயது பேராசான் இவரே ஆவார். இவரது வீடும் (வைக்கோல் வேய்ந்த மிகப்பழைய கூரை வீடு) வளமாயில்லை உடலும் நலமாயில்லை. ஆனால் தள்ளாத வயதிலும் தமிழை ஆய்ந்து தமிழுக்காகவே வாழ்ந்துதமிழை வளப்படுத்தி வருகின்றார்.

பேராசிரியர் திரு. அடிகளாசிரியர் பெற்ற பாராட்டுக்கள்

1. 1967 ஆம் ஆண்டு இராசபாளையம் மணிமேகலை மன்றத்தர் நிகழ்த்திய தொல்காப்பியம் இரு சூத்திர விளக்கக் கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டு முதற்பரிசு பெற்றுள்ளார்.

2. கோயம்புத்தூர் மாவட்டம் பேரூர் மடாலயத்தைச் சேர்ந்த தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் இவரைப் பேரூர் ஆதீனப் புலவராக்கிச் 'செந்நாப்புலவர்' என்ற பட்டத்தை வழங்கியுள்ளார். (28-2-72).

3. விழுப்புரம் மாவட்டம் கல்லக்குறிச்சி தமிழ்க் கவிஞர் மன்றத்தினர் இவருடைய தொல்காப்பியம் எழுத்ததிகாரப பதிப்பினைப் பாராட்டி, பொன்னாடைப் போர்த்திப் பாராட்டுப் பத்திரம் வழங்கியுள்ளனர்

4. தஞ்சாவூர் கரந்தை மீனாட்சியம்மன் திருக்கோவிலில் முறையாகச் சைவ சித்தாந்த நூல்களைப் பாடம் சொன்னதால் அக்கோயில் சைவபிரச்சார சபையினரால் பாராட்டப் பெற்றுள்ளார்.

5. தமிழ்மொழிக்கு எண்ணிறைந்த சேவைகளைப் பல்லாண்டுக்காலம் சலியாது செய்து வருகின்றமையால் திருக்கோவிலூர் பண்பாட்டுக் கழகம் 1992 ஆம் ஆண்டிற்குரிய கபிலர் விருதை இவருக்கு வழங்கிச் சிறப்பித்துள்ளது.

6. சென்னைக் கம்பன் கழகத்தினர் இவருடைய தமிழ்ப் பணியைப் பராட்டிச் சான்றிதழும் பணமுடிப்பும் வழங்கினர் (7-8-1992).

7. உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் இவருடைய தொல் காப்பியம் பணியைப் பாராட்டி இவருக்குத் 'தொல்காப்பியச் செம்மல்' என்ற பட்டத்தை வழங்கியுள்ளது. (4-8-1997)

8. கும்பகோணம் வீரசைவப் பெரியமடம் இவருக்கு 'வீரசைவக்காவலர்' என்ற பட்டத்தை வழங்கியுள்ளது.

9. மயிலம் பொம்மபுர ஆதீனம் இவருக்கு, ''கற்பனைக் களஞ்சியநம்பி'' என்ற பட்டத்தை வழங்கியுள்ளது.(12-10-1998)

10. தமிழக அரசின் தமிழ்வளர்ச்சித்துறை இவரெழுதிய ''திருமூலரும் பேருரையும்'' என்ற ஆய்வு நூலை, 1998 ஆண்டில் வெளிவந்த நூல்களுள் சிறந்த நூலாகக் கருதி ரூ பத்தாயிரத்தை வழங்கிச் சிறப்பித்துள்ளது (15-01-2000)

11 சென்னையைச் சேர்ந்த சேக்கிழார் ஆய்வு மையத்தினர் இவரது தமிழ்ப் பணியைப் பாராட்டி, ''சேக்கிழார் விருதையும்'' நினைவுப் பரிசாக ரூபாய் பாத்தாயிரத்தை வழங்கிச் சிறப்பித் துள்ளனர் (27-07-2001)

12. தஞ்சாவூர் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர் மேன்மை தங்கிய தமிழவேள் த.வே. உமாமகேசுவரம் பிள்ளைப் பெயரில் விருது வழங்கிச் சிறப்பித்தனர். (9-1-2002)

திருமூலரின் முப்பது உபதேசம்

ஆசிரியர் திரு. அடிகளாசிரியன்

பதிப்பாசிரியர் அ. சிவபெருமான்

திரு. அடிகளாசிரியன்

சீடன், குருவின் திருமேனியைக் கண்ணினால் கண்டும், குருவின் திருப்பெயரை நாவினால் கூறியும், குருவின் உபதேச மொழியாகிய திருவார்த்தையைக் காதினால் கேட்டும், குருவின் திருவுருவத்தை மனித உருவமாகக் கருதாமல் தெய்வ உருவமாகக் கருதித் தியானித்தும் போற்றி ஒழுக வேண்டும்.